திராவிடநாடு

14—6—59 | வார வெளியீடு | விலை 16 காசு

மண்மாதாவின் குரல்!

கா. வேழவேந்தன்

நேற்றுநான் அரசி! இந்த
நீள்வையம் என்பேர் பாடும்!
வேற்றவர் பணிந்தார்! எங்கும்
வெற்றிமேல் வெற்றி கண்டேன்!
காற்றோடு வந்து நிற்கும்
கலமெலாம் என்னைச் சூழப்
போற்றுதல் பெற்றேன்! கோடிப்
பொன்பெற்றேன்! புகழைப்
பெற்றேன்!

என்பெயர் பழித்தோர் ஆவி
இருந்ததே இல்லை! இங்கே
என்சீரைக் கேளா மாந்தர்
இருந்ததே இல்லை! நின்று
என்புகழ் பாடா நூல்கள்
இருந்ததே இல்லை! போரில்
என்வீரம் அறியா மார்பு
இருந்ததே இல்லை, இல்லை!

இன்றுநான் அடிமை! ஐயோ!
எடுப்பார்கைப் பிள்ளை யானேன்!
குன்றைப்போல் வளங்கள் பெற்றும்
குருடிநீ என்றார்! இன்று
வென்றநான் வீரக் காதை
விழலுக்கு நீரா யிற்று!
சென்றனர் என்றன் சேய்கள்
திசைதேடிப் பிழைப்ப தற்கு!

என்னநான் சொல்வேன்? இன்று
என்பெயர் இட்ட ழைக்க
சென்னையன் என்னும் பேரில்
திரிபவர் தயங்கு கின்றார்!
இன்னுமா தில்லி யின்கீழ்
என்தலை குனிய வேண்டும்?
இன்னுமா அழிய வேண்டும்?
இங்ஙனம் 'தென்னன் நாடு!'

ஆனந்தம் அங்கே! இன்னல் இங்கே!

—[செ. மொழியன்பன்]—

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த அளவில் தொழில் வளர்ச்சி, போக்குவரத்து முன்னேற்றம், துறைமுகங்கள் அபிவிருத்தி முதலிய அடுக்கடுக்கான துறைகளில் எங்ஙனம் திராவிடம் வஞ்சிக்கப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டுள்ளதோ, அதைப்போலவே தான் நீர்ப்பாசனத் துறையிலும் ஏமாற்றத்திற்கு ஆளாகியுள்ளது.

கடந்த பதினொரு ஆண்டுக்கால காங்கிரஸ் ஆட்சியில் வடநாட்டு ஏகாதிபத்திய சர்க்கார் மிக மோசமான வகையில் நீர்ப்பாசனத் துறையில் தமிழகத்தைப் புறக்கணித்திருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாய வளர்ச்சிக்கு வெகு முக்கியம் அளிக்கப்பட்டது. கோசி அணைக்கட்டுத் திட்டம், கொய்னா அணைக்கட்டுத் திட்டம், சாம்பல் அணைக்கட்டுத் திட்டம், ரிகண்ட் அணைக்கட்டுத் திட்டம், இப்படி அடுக்கடுக்கான பெரிய திட்டங்கள் வடநாட்டில் உருவாகின. 20 இலட்சம் ஏக்கர் புதிய நீர்ப்பாசனம் பெற்றுப் பயனடைய ரூ. 25 கோடி செலவில் சுமார் 5000 குழாய்க் கிணறுகள் வடநாட்டிலேயே முதல் ஐந்தாண்டில் அமைக்கப்பட்டது. வடநாட்டின் விவசாயத்தின் வளப்பத்தை வளர்த்துச் சிறப்பாக்கியது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமோ தென்னகம் பாலைவனமாக, வடநாடு சோலைவனமாக மாறக் கிளைவெட்டிக் கொண்டிருக்கிறது. பெரிய அணைக்கட்டுகளான பக்ரா நங்கல், இராகுட், தாமோதர் பள்ளத்தாக்கு, ... மயூர்காசி, சுக்ராபார், நர்மதா, கங்கபாதி முதலியனவெல்லாம் வடநாட்டிலே நிர்மாணிக்கப்பட்டுள்ளன. 3581 குழாய்க் கிணறுகளில் 3000க்கு மேல் வடநாட்டிலே உருவாகின்றன, முதல் ஐந்தாண்டுத் திட்டம் பாசனத் துறையில் துரிதமாய் வளர அடிப்படையாக இருந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் மேலும் வட மாநிலங்கள் முன்னேறப் பலமான கட்டிடமாக உருவாகிறது.

தமிழ் நாடு மட்டிலும் பாசனத் துறையில் இரண்டு திட்டங்களிலும் சேர்ந்து 41 கோடி ரூபாய் செலவாகி, 9,64,200 ஏக்கர் நீர்ப்பாசனம் பெறும் எனத் தெரிகிறது. தமிழ்நாட்டில் 1951ம் ஆண்டில் திட்டம் துவக்கப்படாத நேரத்தில் 50 இலட்சம் ஏக்கர் நீர்ப்பாசன வசதி பெற்றிருந்தது. எனவே இரண்டு திட்டங்களிலும் ஐந்தில் ஒரு பங்கு தமிழ் நாடு பாசனத் துறையில் வளர்ந்திருக்கிறது. தமிழகத்தைப் போலவேதான் திராவிடத்தின் வேறு பகுதிகளான ஆந்திரம் கேரளம், கன்னடம் ஆகியவைகளும் பாசனத் துறையில் பெரிதும் பின் தங்கியுள்ளன.

அதுமட்டுமல்ல:

உத்திரப் பிரதேச விவசாய தொழிலாளிக்கு ஆண்டொன்றுக்கு சராசரியாக விவசாயத் துறையில் 255 நாட்களும் வேறு வாய்ப்புகளில் 34 நாட்களும் வேலை கிடைக்கிறது. ஆனால் தென்னகத்து விவசாயிக்கோ முறையே 160 நாட்கள் 21 நாட்கள் ஆகக்கூடுதலாக 181 நாட்களுக்கே வேலை கிடைக்கிறது ஆண்டிறுகு.

உத்திரப்பிரதேசத்தில் விவசாயத் தொழிலாளி ஒருவனின் குடும்ப வருமானம் ரூ. 551. இங்கே ரூ. 382 தான். உத்திரப்பிரதேசத்தில் தனி நபர் வருமானம் ரூ. 131. இங்கே ரூ. 91 தான்.

மேலே தரப்பட்டுள்ள விவரங்களிலிருந்து உத்திரப்பிரதேச விவசாயத் தொழிலாளிக்குக் கூடுதலான நாட்களுக்கு வேலை கிடைக்கிறது. எனவே அதிக ஊதியம் பெறுகிறான். தென்னாட்டு விவசாயத் தொழிலாளிக்குக் குறைவான நாட்களுக்கே வேலைக்கிடைக்கிறது—எனவே கொஞ்சம் ஊதியமே கிடைக்கிறது. ஆக, வடநாட்டு மக்களுக்கு வளமான வாழ்வு 'திராவிடர்களுக்கு வரண்டவாழ்வு' ஆனந்தம் அங்கே, கண்ணீர் இங்கே! இதற்கான முக்கிய, தெளிவான காரணம் வடக்கின் வஞ்சகமும், சூதும், அநீதியும், தெற்கின் அடிபணியும் தன்மையும், காவடி தூக்கும் போக்கும், பாதபூசை செய்வதும்தான்.

வடநாட்டுமக்கள் மட்டும் என்ன, உலகத்தில் உள்ளோரனைவருமே வாழ்வும், வளமும், பெற்று வாழ்வதிலே பெருமகிழ்ச்சிதான். இது தான் பகுத்தறிவின் பண்பும் ஆகும். ஆனால் ஒரு பகுதியினரின் வாழ்வு, வளம், முன்னேற்றம், சூறையாடப்பட்டு, வஞ்சிக்கப்பட்டு, இன்னொரு பகுதியினர் பெருவாழ்வில் அதிக முன்னேற்றம் பெற்று வாகை சூடித் திளைப்பதென்றால்; உரிமை உணர்ந்தவர்கள் ஒருக்காலும் இந்த அநீதியை ஒப்பவே

(15-ம் பக்கம் பார்க்க)

அறிவியக்க ஏடுகள் போற்றும்
சிறந்த அரசியல் நூல்!
"இங்கிலாந்தில்
ஒரு
தி. மு. க."
தி. மு. க. முன்னணி எழுத்தாளர்
ஆர். எஸ். பாண்டியன்
எழுதியது.
விலை. 50 காசுகள்:
விற்பனையாளருக்கு 25% கழிவு உண்டு. தனிப்பிரதி வேண்டுவோர் 55 காசுகள் பணவிடை (M. O.) செய்க.
விவரங்கட்கு:
கலையரசி பதிப்பகம்,
27, குட்டி நாய்க்கன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை
சென்னை-2

உரிமை

மலர் 17 | ஆண்டுச் சந்தா ரூ. 8. (14—6—59) தனிப் பிரதி 16-காசு | இதழ் 48

மாநகராட்சி மன்றத்தில் நாம் அமர்ந்த பிறகு, டில்லித் தலைவர்கள், தெற்கு நோக்கி 'டேரா' போட ஆரம்பித்திருப்பதை, நாடு அறியும்! வட்டம், மாவட்டம், கிராமம் என்று விரைவில், தமிழகத்தின் ஊர்களிலெல்லாம், சுற்றுப்பயணம் நடாத்தப் போகிறாராம், இந்திரா அம்மையார்! செல்வாக்குப் போய் விடுமோ? — என்கிற அச்சம் எற்படும்போதெல்லாம், வடக்கிலிருந்து யாரையாவது இறக்குமதி செய்வது, இங்குள்ளோர் வாடிக்கை! அந்தக் கலையில் வல்லவரான காமராஜர், அதுவும் இந்த நேரத்தில் வாளா இருப்பாரா!!

சென்னையில் நாமும், கோவையில் கம்யூனிஸ்டுகளும், மதுரையில் ஜனநாயகக் காங்கிரசுமாக நகராட்சி செய்கின்றன இப்போது. இதுவரை காங்கிரஸ் கட்சியின் சல்லாபக் கூடங்களாயிருந்த இந்த மாநகர மன்றங்கள், எதிர்க்கட்சிகளின் வசம் சென்றது, இங்குள்ளோருக்கு அச்சத்தையும், டில்லி மூலவர்களுக்கு அதிர்ச்சியையும் தந்திருக்கிறது. மொரார்ஜி வருகிறார், நேரு மாதம் இருமுறை 'விஜயம்' நடத்துகிறார், இந்திரா அம்மை இங்கு அடிக்கடி வருவேன் என்கிறார். இப்படி ஒரு புதுவேகமும் பரபரப்பும் ஏற்பட்டிருக்கிறது, காங்கிரஸ் கட்சிக்குள்! இதிலென்ன விசித்திரம் என்றால், ஏனையோரைக் கூட இவர்கள் அதிகம் குறிப்பிடவில்லை, எங்கும் நம்மைப்பற்றியே பேசுகின்றனர்!!

முதல் ஒத்திகையாக, சென்னை தேனாம்பேட்டையில் இந்தக் கிழமை காங்கிரசின் மாவட்ட மாநாட்டை நடத்தியிருக்கிறார்கள். கோட்டைவிட்ட இடமல்லவா! இழந்த கோட்டையை வலிவுபடுத்த, கூட்டினர் போலும் இம்மாநாட்டினை!! மாவட்ட மாநாடு என்றதும், ஆங்காங்கு நடைபெறும், நமது மாநாடுகளின் கவனம் வரக்கூடும், தோழர்களுக்கு. இரண்டையும் ஒப்பிட, எவரது மனமும், தயங்கும்! அப்படியிருந்தாம், திருமதி இந்திரா அம்மை அழைத்து வரப்பட்டிருந்தும், அவர்தம் மாநாடு! அங்கே, அன்பர் சுப்ரமணியனாரும், திருத்தேவி இந்திராவும், வழங்கியுள்ள அறிவுரைகளைக் கண்டோம். ஒரு மாற்றம் உணர்ந்தோம். இதுகாறும், காங்கிரஸ் அமைச்சர்களும், தலைவர்களும், பேசுவதென்றால், 'மக்களுக்கு' அறிவுரைகள் தருவர்! மக்கள் யாவரும் காங்கிரசுக்குரியவர்கள் எனும் கருத்தில், புதிய போதகர்களாகி, கொட்டுவர் போதனைகளை!! அந்த மக்கள், இப்போது, தம்மைவிட்டுப் போய்விட்டனர், என்கிற உண்மை அவர்தம் உள்ளத்தில் உறைக்க ஆரம்பித்துவிட்டதாலோ என்னவோ, இம்முறை மக்களைவிட்டு, "காங்கிரசாருக்கு" அறிவுரைகள் வழங்கியிருக்கின்றனர்.

தோற்ற கட்சி, தன்னுடையவர்களுக்குத் தெம்பூட்டவும், நாங்களும் இருக்கிறோம் என்பதைக் காட்டவும், ஒருவருக்கொருவர் மனதைத் தேற்றிக்கொள்ளவும், இதுபோலக் கூடுதல் இயல்பு. குற்றங் குறைகளை, ஆராய்தலும் உண்டு. இவ்விதம் ஆராயாமல் நினைத்தபடி தர்பார் நடாத்தலாம் என்கிற துணிச்சலால்தான், காங்கிரஸ் ஒரு எதேச்சாதிகார மடமாகி நிற்கிறது இன்று! இத்தவறை, இன்றாவது அவர்கள் உணர்கிறார்கள் என்றால், மகிழ்ச்சிக்குரியதே. ஆனால், அவர்கள், தமது தவறுகளை உணர்ந்தார்களாஎனின், இல்லை! நான் வைத்துள்ள பழம் இனிக்கவில்லை எனின், அதுபழத்தின் குற்றமல்ல பழத்தை விற்பவன் குற்றம் என்றானாம் ஒரு தோட்டக்காரன்!! அதுபோல, காங்கிரசின் போக்கினை மக்கள் ஏற்கவில்லையென்றால், அது காங்கிரசின் குற்றமல்ல, காங்கிரஸ்காரர்களுடைய குற்றம்தான் என்று விளக்கம் தந்திருக்கிறார்கள்!! ஏழுகட்டை சுதியில் பாடுபவனை அழைத்து 'இனிக்கும் பலா' என்று பாடச்சொல்வதாலேயே, எட்டிக்காய், பலாவாகிவிட முடியாது; சிறந்த விளம்பரம் செய்வதாலேயே, சீந்தாத சரக்கு, வியாபாரம் ஆகிவிடாது; கலர் சிலைடுகள் ஏராளம் போட்டுக் காட்டுவதாலேயே கர்த்தபம் கானமயிலாகிவிட முடியாது; அதேபோல, எவ்வளவுதான் கத்தினாலும், எங்கு ஒளியுண்டோ, எங்கு உண்மையுண்டோ, அதைத்தான் ஏற்பார்கள் மக்கள். வெள்ளைக் குல்லாயையும் வெள்ளிப் பணத்தையும் காட்டி, மக்களிடம், ஓட்டுகள் வாங்கிய காலம் கொஞ்சங் கொஞ்சமாக மறைந்து வருகிறநேரம் இது. வெள்ளிப் பணமல்ல வெள்ளை மனமுண்டா; குல்லாயல்ல, உன் கொள்கையென்ன என்று மக்கள் மன்றம் கேட்கத் தலைப்பட்டிருக்கிறது. ஆனால், கூடிய கோமான்கள், இந்த அடிப்படை மாற்றத்தை, வழக்கம்போலவே மறந்து, சீப்பில்லாததால்தான் திருமணம் நின்றுவிட்டது என்று செப்பியிருக்கின்றனர்! காங்கிரசின் கொள்கைகளையும் சாதனைகளையும், மக்களிடம் சரியாக எடுத்துச் சொல்லாததால்தான், மாநகரங்களில் மாற்றார் இடம் பெற்றனர் என்று பேசியிருக்கின்றனர்!!

காமராஜர் முதல் கலா நிகழ்ச்சி செய்யும் கந்தன் வரையில், காங்கிரசின் சாதனைகளைச் சொல்ல, பவனி வருகிறார்கள். 'டேப்' அடிக்கலாமா பெரியாரைப் பிடிக்கலாமா, திருவிழாக்களில் கண்காட்சி நடத்தலாமா, சினிமாக்காரர்களை நாடலாமா, என்று இப்படி

எத்தனையெத்தனையோ வழிகளிலெல்லாம், 'சாதனைகளை'ச் சொல்லித்தான் வருகின்றனர். இருந்தும், எடுபடவில்லை! ஏன்? இந்த 'ஏன்?' என்கிற கேள்வியை மனதிலே எழுப்பி, பதில் தேடியிருப்பார்களாயின், நிலைமையுணர்ந்தவர்கள் என்போம் நாம்! பழைய பல்லவியைப் பாடியபடியே கலைந்திருக்கின்றனர்!!

கேட்பார்களல்லவா உண்மைக் காங்கிரஸ்காரர்கள், "எங்களுக்கு எங்கே ஐயா கட்சியில் இடமிருக்கிறது? எங்கேயிருக்கிறான் கட்சிக்குப் பாடுபட்டவன்? கொடி தூக்கியும், கூட்டம் அமைத்தவனும் இருந்த இடத்தைக் கோபுரவாசிகளுக்கும், மிட்டாமிராசுகளுக்கும் அளித்துவிட்டு, காங்கிரஸ்காரர்கள் வேலை செய்யவில்லை என்றால், என்ன பொருள்? சரி, நாங்கள் வேலை செய்வதாகவே, வைத்துக்கொண்டாலும், மந்திரிகளாகவும் தலைவர்களாகவுமிருக்கும் நீங்கள் மக்களுக்காகச் சாதித்தது என்ன? எதைச் சொல்லிக்கொண்டு மக்கள் முகத்தில் விழிப்போம்?," என்று. அந்த அச்சத்தால்தான் போலும், வடக்கேயிருந்து பெரிய தலைகளை அழைத்து வந்தால், எதிர்த்துப் பேசமாட்டார்கள் இங்குள்ள தொண்டர்கள் என்று, இறக்குமதியை வேகப்படுத்தி வருகின்றனர்! அவர்களை விட்டே, காங்கிரஸ்காரர்கள்மீது பழி சுமத்தி அமைச்சர்கள் தப்பித்துக்கொள்ள முயற்சிக்கின்றனர்!!

மாநாட்டில் அன்பர் சுப்பிரமணியனார் பேசினாராம். குரலில் சோகமிருந்ததாம்! எனினும் சோகத்திலும் சோபிதத்தைக் காண முயன்றிருக்கிறார்— அந்த இடம்தான் நமக்கு ஆச்சரியம் தருகிறது!! சென்னையில் காங்கிரசைக் கை கழுவி விட்டவர் என்பதை அமைச்சர் மறுக்கவில்லை. ஆனால், அதற்கு அவர் அளித்துள்ள விளக்கம், விந்தையாக உள்ளது. வக்கீல் அவர்! பழுதைப் பாம்பாக்கும் திறனிருக்கவேண்டும் என்பர் ஒரு வக்கீலுக்கு!! அந்தத் திறமையை, அழகுபட, காட்ட முயன்றிருக்கிறார், இம்மாநாட்டில். **தோற்றதும் நன்மைக்கே!**—என்று தோள் தட்டியிருக்கிறார். கோதாவில் குப்புற விழுந்த பயில்வான், குத்துச்சண்டைக்கு ஒத்திகை நடத்துகிறேன் என்றால் எவரும் ஒப்பார்! **வரப்போகிற பொதுத் தேர்தலுக்கு இப்படித் தோற்றது நல்லது**—என்று பேசியிருக்கிறார் சுப்பரமணியம். தோல்விதான், காங்கிரசாருக்கு வெறியுண்டாக்குமாம்! இனி வெற்றியைக் குவிக்கப் பயன்படுமாம்!! இந்த அரும் பொருளினையுணர்ந்து, நடைபெற்ற நகரமன்றத் தேர்தல்களின்போது, எல்லா ஊர்களிலும் காங்கிரஸ் தோற்க முகாமமைத்து வேலை செய்திருக்கலாமே? விட்டாரா அமைச்சர்! எங்கெங்கே ஓடினார்—எத்தனை ஊர்களில் பேசினார்—கக்கனும் காமராசும் கச்சையை வரிந்துகொண்டன்றோ கிளம்பினர்! சேலம் போன்ற இடங்களில் இச்சையைப் பூர்த்தி செய்துகொள்ள ஓட்டுப் பிச்சையுமன்றோ தேடினராம், காசு கொடுத்து!! தோல்விக்குப் பிறகு வரும் இந்த விவேகம், ஏன் அப்போது வரவில்லையோ, அறியோம் நாம்.

"திருடர்களே! போலீசார் இருப்பது எதற்குத் தெரியுமா? நமக்கு உற்சாகம் ஊட்டி, திறமையாகத் தொழில் செய்யத்தான்!!"

"புலிகளே! காவல்காரனிருப்பது ஏன் தெரியுமா? சாமர்த்தியமாக நாம் பசுக்களைக் கவரும் தொழிலில் சிறந்து விளங்கத்தான்!!"

"ஓநாய்களே! உங்கள் திறமையினை எண்…

போடத்தான், வேலி கட்டியிருக்கின்றனர். வேறெதற்குமில்லை."

இப்படி, எவரும் பொருள்காணார்! ஆனால் அமைச்சர் கூறுகிறார்!! எதிர்க்கட்சிகள் பெற்ற வெற்றி, காங்கிரசுக்கு உற்சாகம் ஊட்டவாம். அடுத்த வீட்டுப் பிள்ளை 'பாஸ்' செய்தது, 'பெயிலான' என் மகனுக்கு உற்சாகம் ஊட்ட என்று எந்தத் தந்தையும் கூறார். ஆனால், சிறந்த கட்சி, சீரியகட்சி, காந்தியார் வளர்த்த கட்சி, என்றெல்லாம் பாராட்டப்படும் காங்கிரஸ் கட்சிக்கு உற்சாகம் உண்டாக்கத்தான், மக்கள் எதிர்க்கட்சிகளுக்கு ஓட்டுப் போட்டனராம்! இந்த விளக்கம் தர, ஏன் முன் வந்தாரோ, அமைச்சர்—அதுவும், மக்கள் சென்னையில் காங்கிரசை ஆதரிக்கவில்லை என்று உரைத்த அதே வாயால்!!

தலைவர்கள் முழங்கலாம், தளபதிகள் வடக்கிலிருந்து அழைத்து வரப்படலாம், மந்திரிகள் 'திக்' விஜயம் செய்யலாம், மதிப்புப் பெற்றவர்கள் மார் தட்டிப் பேசலாம், எதிர்க்கட்சிகளின் வெற்றியால் எங்களுக்கு ஊக்கம் ஏற்படுகிறதெனலாம், இந்தத் தோல்வியால் நாங்கள் நாளை வெல்வோமென மன ஆறுதல் பெறலாம். ஆனால் ஒன்று! இவையாவும், தோல்வியை மறைக்கும் தோலால் ஆன கேடயங்களே ஒழிய, மக்களின் மனதை வளைக்கும் திட்டங்கள் அல்ல! தெரிந்துகொள்ளவேண்டும் காங்கிரசுத் தலைவர்கள்!!

மக்களின் மனதை வளைக்க எம்மிடமா திட்டம் இல்லை? இதோ இருக்கிறது ஐந்தாண்டுத் திட்டம் எனலாம் அமைச்சர்கள்! ஒன்று, இரண்டாகி, மூன்றாவது திட்டத்தின் கட்டத்தில் இருக்கிறது நாடு. ஆனால், இந்தத் திட்டங்களால் தென்னகத்துக்கு விளைந்த பயன் என்ன என்று கேட்கிறார்கள் மக்கள். ஒரு ஆண்டல்ல, இரண்டல்ல, பத்தாண்டுகளுக்குமேல் 'பாரத புத்திரர்'கள் ஆள்கிறார்களே, பயனென்ன கண்டோம் என்று கேட்கிறார்கள் மக்கள். புதிதாக என்ன நன்மைகளைச் சாதித்துவிட்டது என்று வேதனையோடு கேட்கின்றனர், இந்நாட்டு மக்கள். பத்தாண்டுகள் என்பது சாதாரணமான காலமல்ல! உலகத்திலுள்ள ஜனநாயக நாடுகளில் தொடர்ந்து ஒரு கட்சி ஆட்சியிலேயிருந்தும், எதுவும் சாதிக்க முடியவில்லை என்பது அதிசயமான நிகழ்ச்சியாகும்! அதோ, அழுகிறான் விவசாயி! அவனிடம் கூட்டுறவுப்பண்ணை கொண்டுவரப்போகிறோம். இது புதிய திட்டமன்றோ எனலாம் காங்கிரஸ்காரர்கள். ஆனால் ஆயிரம் இரண்டாயிரம் ஏக்கர்களுக்கு அதிபதியான பண்ணையார்கள், தமது நிலங்களையெல்லாம் எப்படியெப்படிப் பங்கீடு செய்துள்ளனர் என்பதை அறியாமலில்லை, ஏழை விவசாயி. இதோ மதுரை, விக்ரமசிங்கபுரம், தூத்துக்குடியில் இந்தக் கிழமை ஆலைத் தொழிலாளரின் அவலக்குரல் கிளம்பியிருக்கிறது. அன்றாடம் எங்காவது ஓரிடத்தில், தொழிலாளியின் குமுறல் ஒலிக்கிறதேயன்றி, ஒழியவில்லை இவர்களாட்சியில்! படித்தும் வேலையில்லாதவர்கள், உழைக்கத் தயாராகயிருந்தும் உழைக்க வாய்ப்பற்றவர்கள் ஏராளம்! ஏராளம்!! இவர்களுக்கு ஆலைகளோ, தொழில்களோ அமையவில்லை, தெற்கில். மகனுக்கு வேலை கிடைக்கவில்லையே என்றழும் தந்தையும், கிழவராகிப்போன தந்தையை எப்படிக் காப்பாற்றுவேன் என்றலையும் வாலிபனும், உழைத்தும்

(13-ம் பக்கம் பார்க்க)

எப்படி மறப்பேன்

[அடிகள்]

1938-ல்—அன்று முதலமைச்சராக இருந்த ஆச்சாரியார் அவர்களால் புகுத்தப்பட்ட கட்டாய இந்தித் திணிப்பை எதிர்த்து அறப்போர் நடாத்த முடிவு செய்து, கருவூரில் இருந்து திருச்சி வந்து, (அதுவரைக்கும்தான என்னிடம் பணம் இருந்தது) தோழர் வேதாசலம் அவர்களைக் கண்டு சென்னை செல்லும் வசதியை(பணம்) பெற்றுச் சென்னைத் தியாகயாய நகரில் இருந்த பெரியார் சி. டி. நாயகம் அவர்கள் வீட்டுக்குச் சென்று, எனது கருத்தைத் தமிழ்ப் பெருமக்கள் சார்பில் வெளியிட்டேன். அவர்களும் ஆவன செய்வதாக உறுதி கூறி என்னைத் தன் வீட்டில் தங்கியிருந்து அறப்போருக்கு ஆவன செய்யுமாறு ஆதரவு அளித்தார்கள். இவ்வளவுக்கும், அவரை நானோ, அவர் என்னையோ நேராக அறிந்து பழகியவர்களல்ல. இருந்தும் என்னைத் தன் பிள்ளைபோல் கருதி எல்லாவித உதவியும், அறப்போருக்குத் தேவையான ஆய்வுரைகளும் நல்கினார்கள்.

இந்தி எதிர்ப்புப் போர் துவங்கி, ஆச்சாரியார் மாளிகையின்முன் மறியல் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம், ஒரு நாள், மறைந்த மறக்குல அன்னை டாக்டர் தருமாம்பாள் அவர்களும், வேறு சில தாய்மார்களும் தியாகராய நகரிலுள்ள இந்தி எதிர்ப்பு நிலையத்துக்கு வந்து, என்னையும், எனக்கு அரும்பெருந் துணையாக நின்று அறப்போரில முழுப்பங்கேற்றுப் பெரும்பணி புரிந்த அருணகிரி அடிகளையும், சண்முகானந்த அடிகளையும் கண்டு,

"இந்தி எதிர்ப்பு அறப்போரில்,
தாய்க்குலத்தவராகிய நாங்களும்
பங்கு கொள்ளப் போகின்றோம்"

என்ற, தமிழ்போல் இனிக்கும் செய்தி கூறியதை நான் என்றைக்கும் மறக்க முடியாது.

அன்னை தருமாம்பாள் அவர்களின் பெருந்தொண்டு, இந்தி எதிர்ப்பை நல்ல முறையில் வெற்றிகரமாக நடாத்திச்செல்வதற்குப் பெரும் உதவியாக அமைந்ததென்று கூறுவது மிகைபடக் கூறுவதாகாது.

பெரியார் அவர்களின் பெருந்துணையும், அண்ணு அவர்களின் அறிவமைந்த ஆதரவும், தமிழ் மக்களின் தக்க ஒத்துழைப்பும் கிடைத்த காரணத்தால், இந்தி எதிர்ப்புவெற்றிகரமாகவே நடைபெற்றது.

தமிழறிந்த பெரிய[illegible]லர், கட்சிக் கட்டுப்பாட்டையும் மீறி இந்தி எதிர்ப்பில் கலந்து பணியாற்றினர்.

அன்னை தருமாம்பாள் அவர்கள் இந்தி எதிர்ப்பில் ஈடுபட்ட காரணத்தினாலே தான், பல நூற்றுககணக்கான தாய்மார்கள்—தாங்கள் பெற்ற பச்சிளங் குழந்தைகளுடன் சிறைக்கோட்டம் சென்று இந்தி எதிர்ப்பை மேலும் வெற்றிபெறச் செய்தனர் என்று கூறுவது, டாக்டரம்மா அவர்களுக்கு நாம் தரும் வெறும் புகழ்ச்சியல்ல. நாடும் நல்லவர்களும் அறிந்த உண்மையாகும்.

அன்பர் ஆச்சாரியார் அவர்கள் மாளிகைமுன் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மறியல், பிறகு பள்ளிக்கூடத்துக்குமாற்றப் பட்டது.

பள்ளிக்கூட விடுமுறை காரணமாக சின்னுட்கள் நிறுத்தப்பட்ட அறப்போர், மீண்டும் துவக்கப்பட்டு நடந்துவந்த சமயத்தில், பெரியார் அவர்களுக்கும் எனக்கும் ஏற்பட்ட சிறு கருத்து வேறுபாடு காரணமாக, நான் இந்தி எதிர்ப்புப் பணியிலிருந்து விலகவேண்டிய—இல்லை இல்லை—விலக்கப்பட வேண்டியவனுனேன். (இதற்குரிய காரணங்களை எல்லாம் விளக்க இது சமயமல்ல—தேவையுமில்லை)

அந்தச்சமயத்தில், சென்னை வீதிகளில் ஆதரவற்ற நிலையில் நின்ற என்னை, அன்போடு அழைத்து, "அடிகளே, என் வீட்டில் தங்கி ஆறுதல் பெறுக' என்று கூறிய அன்னை டாகடரம்மா அவர்களை நான் எப்படி மறப்பேன்.

எனதருமை அண்ணு அவர்களின் ஆதரவு எனக்குக் கிடைக்கும்வரை, ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுக் காலம், எனக்கும், சண்முகானந்த அடிகளுக்கும் உணவும் உடையும் அளித்து உவகையோடு உபசரித்த அன்னையாரின் பெருங்குணத்தையும் பண்பாட்டையும் நான் என்றைக்கும் மறக்கமுடியாது.

இதுபோலவே, டாக்டரம்மா அவர்களின் அன்புப் புதல்வனும் டாக்டர் சிற்சபை அவர்களும், அவரது அருமைத்துணைவியார் சரசுவதி அம்மையார் அவர்களும், எம்பால் அன்புகாட்டி என்னையும், சண்முகானந்த அடிகளையும் தங்கள் உறவினர் போன்று— இல்லை— உடன் பிறந்தாரே போன்று தமிழர் பண்புக்கு எடுத்துக்காட்டாக விளங்கி ஆதரித்த பெருந்தன்மையை நான் என்றைக்கும் மறக்கவே முடியாது.

அன்னையின் தொண்டு சிறக்கட்டும், அவர் புகழ் வாழட்டும், தமிழ் வெல்லட்டும்.

தமிழோசை-4

நமது நுண்கலை

உ

இசை, நடனம், நாடகம் என்பன நுண்கலைகள் எனப்பெயர் பெறும். இவற்றைப் போற்றி வளர்க்கும் நாடே நாகரிக நாடு என்பது மக்களது நீண்டநாட்கருத்தாக இருந்து வருகின்றது. நுண் உணர்வைத் தட்டியெழுப்பித் தம் வயப்படுத்தும் கலைகளாதலின், இவை நுண் கலைகள் எனப் பெயர்பெற்றன. நம் தமிழ் மக்கள் இக்கலைகளை எங்ஙனம் போற்றி வளர்த்தனர் என்பதைச் சுருக்கமாக இங்கு காண்போம்.

இசைக்கலை

இசை என்னும் சொல் இசைவிப்பது, தன்வயப்படுத்துவது எனப் பொருள்படும். மரம், செடி, கொடி என்னும் ஓரறிவுயிர் முதல் மக்கள் என்னும் ஆறறிவுயிர் ஈறாக உயிர்களனைத்தையும் இசை தன் வயப்படுத்தவல்லது. மகுடி இசையில் மயங்கும் பாம்பு, இசையில் மயக்குண்டு மிக்க சுமையை இழுக்கும் வண்டிமாடும், பாடிக்கொண்டே பாரக்கல்லை உருட்டுபவரும் மேற் கூறப்பெற்ற உண்மைக்குச் சான்றுவர். இத்தகைச் சிறப்புடைய இசை, மதங்கொண்ட யானையையும், வழிப்பறி செய்யும் கொள்ளையரையும் மனமாற்றம் செய்யவல்லது என்பதை அகநானூறு, நற்றிணை, சிந்தாமணி முதலிய நூற் செய்திகளிலிருந்து அறியலாம்.

பண்டைத் தமிழகத்தில் செய்யப்பட்ட நூல்களிற் பெரும்பாலன, செய்யுள் வடிவிலேயே அமைந்தவை. பிற்காலத்திற்றோன்றிய கல்வெட்டுகளிற் பலவும் அங்ஙனமே. அவற்றுக்கும் பிற்படத் தோன்றிய கடித வடிவில் அமைந்துள்ள சீட்டுக் கவிகளும் மிக்கிருத்தலைக்காண, ஏறத்தாழப் 18-ஆம் நூற்றாண்டு வரையில் தமிழகத்தில் இசைத் தமிழ் நூல்களே மிக்கிருந்தன என்று கூறுதல் பொருந்தும். தமிழ்ப்பிள்ளைகள் தம் குழந்தைப் பருவத்தில் தாலாட்டுப் பாக்களையும் ஊசற் பாக்களையும் கேட்டனர்; விளையாடும் பருவத்தில் பந்து விளையாட்டுப் பாடல் (கந்துக வரி) அம்மானை, பொற் சுண்ணம், சாழல், தெள்ளேணம், உந்திபறத்தல், தோள் நோக்கம், முதலிய ஆடல்களுக்குரிய பாடல்களைப் பாடி மகிழ்ந்தனர். மணத்தில் மங்கல வாழ்த்துப் பாடலைக் கேட்டனர்; உலக்கை கொண்டு குத்தும் தொழிலுக்குரிய பாட்டு வள்ளைப் பாட்டு எனப் பெயர் பெற்றது. ஏற்றங்கொண்டு நீர் இறைப்பவர் பாடிய ஏற்றப் பாட்டு முதல் உழைப்புத் தொழில்கள் அனைத்திற்கும் பாடல்களிருந்தன என்பது தெரிகின்றது. தமிழன் இறந்த பின்னரும் பாட்டு

டாக்டர்
மா. இராசமாணிக்கனார்

சிங்கப்பூர் 'தமிழ் முரசு'
மலர் மூலம் தந்த
கருத்து

அவனை விடவில்லை. பலவகைச் சந்தங்களில் ஒப்பாரிப் பாக்கள் இன்றும் இருத்தலைக் காணலாம். இங்ஙனம் பழந்தமிழர் தம் பிறப்பு முதல் இறப்புவரை இசையிலேயே வாழ்ந்து வந்தனர் எனக் கூறுதல் முற்றிலும் பொருந்தும்.

இசைக்குரிய நூல்கள் பலவற்றுள் சிலப்பதிகாரம் தலைசிறந்தது. அதன் உரையைக்கொண்டு முன்னிருந்த இசைத் தமிழ் நூல்கள், இசைக் கருவிகள், இசைவாணர்கள் பற்றிய பல விவரங்களை நன்கு அறியலாம். கி. பி. 7, 8, 9-ஆம் நூற்றாண்டுகளில் [illegible]ிய தேவாரத் திருப்பதிகங்களும், ஆழ்வார் பிரபந்தங்களும் அக்கால வழக்கிலிருந்த பலவகைப் பண்களையும் (இராகங்கள்) தெரிவிப்பனவாகும். குறவஞ்சி, பள்ளு, சிந்து முதலியன இசைத் தமிழ் நூல்கள்.

தமிழ்ப் பண்கள் ஏழு: அவை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனப் பெயர் பெற்றன. இவற்றிலிருந்து பிறப்பவை திறங்கள் எனப்பட்டன. இவ்வாறு பிறக்கும் பண்களும் திறங்களும் பல கிளைகளாக இயங்கும் வகைகளில் எண்ணிறந்த இசை வகைகள் கண்டறியப்பட்டிருந்தன. பண்கள் பல வகைப்படும். அவற்றுள் குறிஞ்சி, பாலை முல்லை, மருதம், நெய்தல் எனப் பெறும் பண்கள் ஐந்து. இவற்றின் வகைப்பட்ட பண்கள் பல. அவற்றுள் பகற்பண்கள், இராப்பண்கள், காலைப் பண்கள், மாலைப் பண்கள் என அவ்வப்பொழுதிற்கமைந்த பண்களும் வழக்கில் இருந்தன.

இசைக் கருவிகள்

தண்ணுமை, தடாரி, குடமுழா, முதலிய பலவகைத் தோற் கருவிகளும் புல்லாங்குழல், நாதசுரம், முதலிய துளைக் கருவிகளும், அக்கால வழக்கிலிருந்தன. நரம்புக் கருவிகள் பல வகைப்பட்டன. அவற்றுள் ஏழு நரம்புகளை உடைய செங்கோட்டியாழ், பதினான்கு நரம்புகளையுடைய சகோட யாழ், பத்தொன்பது நரம்புகளையுடைய மகரயாழ், இருபத்தொரு நரம்புகளையுடைய பேரியாழ் என்பன வழக்கிலிருந்தன. கி. பி. 300க்குப் பிறகே வீணை என்னும் புதிய கருவி வழக்கிற்கு வந்தது. வெண்கலத்தாற் செய்யப்பட்ட தாள வகைகள் கஞ்சக் கருவிகள் எனப்பட்டன.

இசைவாணர்

பாடுவோர் இன்ன இன்ன இலக்கணங்களுடன் பாடவேண்டும்

என்பது சிந்தாமணியிலும் திருவிளையாடற் புராணத்திலும் குறிக்கப்பட்டுள்ளது.

'கருங்கொடிப் புருவம் ஏற; கயல்நெடுங்
கண்ணும் ஆடா;
அருங்கடி மிடறும் விம்மா; அணிமணி
எயிறும் தோன்ற;
இருங்கடற் பவளச் செவ்வாய்
திறந்திவன் பாடினனோ
நரம்பொடு வீணை நாவின் நவின்றதோ
வென்று நைந்தார்.

—சீவக சிந்தாமணி.

'வயிறது குழிய வாங்கல்
அழுமுகங்காட்டல் வாங்கும்
செயிரறு புருவ மேறல் சிரம்நடுக்குறல்
கண்ணுடல்
பயில்தரு முடறு வீங்கல் பைபென
வாய் அங் காத்தல்
எயிறது காட்டல் இன்ன உடல்தொழிற்
குற்றம் என்ப',

—திருவிளையாடற் புராணம்.

இசையாசிரியர் தகுதிகள் சிலப்பதிகார உரையிலும் விளக்கப்பட்டு உள்ளன. இசைவாணர்கள் பாணர், பாடினியர் எனப் பெயர் பெற்றனர். இவர்கள் அரசர்களாலும் பிரபுக்களாலும் பாதுகாக்கப் பட்டனர்.

நடனக்கலை

இசைக் கலையைப் போலவே நடனக்கலையும் தமிழகத்தில் நன்கு வளர்ச்சிபெற்று வந்தது என்பதனைத் தொல்காப்பியம், சிலப்பதிகாரம் முதலிய பழந்தமிழ் நூல்களால் நன்கு அறியலாம். வேட்டுவப் பெண்கள் முதல் எல்லா நிலத்து மக்களும் தத்தம் நிலத்துக்குரிய நடனவகையில் சிறப்புற்றிருந்தனர். இதனை வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை முதலிய பெயர்களைக் கொண்டு நன்கு அறியலாம். நடனக் கலையில் தேர்ச்சி பெற்ற பெண்கள் விறலியர் எனப்பட்டனர். நடனத்திற் பயிற்சி பெறும் பெண் ஏழு வயது முதல் பன்னிரண்டு வயது வரை அக்கலையில் பயிற்சி பெற வேண்டும். பயிற்றுவிக்கும் ஆடலாசிரியரின் இலக்கணம் சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்டுள்ளது. வசைக் கூத்து, புகழ்க் கூத்து, சாந்திக் கூத்து, விநோதக் கூத்து, வேத்தியல், பொதுவியல் என நடனம் பலவகைப்பட்டது. கூத்து என்னும் பழந் தமிழ்ப் பெயரே

(10-ம் பக்கம் பார்க்க)

திருச்சி மாவட்ட

தி. மு. கழக 3-வது மாநாடு

1959 ஜூன் திங்கள் 20, 21 சனி, ஞாயிறு ஆகிய நாட்களில்
துறையூரில் நடைபெறும்

தலைவர்:
சி. பி. சிற்றரசு

திறப்பாளர்:
'முரசொலி' மாறன் எம். ஏ.

அண்ணாதுரை, நாவலர் நெடுஞ்செழியன்

கழக முன்னணி வீரர்கள்—கலைஞர்கள் மற்றும் பலர் கலந்துகொள்வர்.

கலைஞர் கருணாநிதி பங்கேற்று நடிக்கும்
"உதயசூரியன்"
நாடகம் நடைபெறும்.

இசை நிகழ்ச்சிகளும்
உண்டு.

நன்கொடை (இரு நாட்களுக்கும்)
ரூ. 10, 5, 2, பெண்கள் ரூ. 1.

3

முத்துவின் தந்தை முருகேச பிள்ளை கூத்தாண்டவர் கோயில் தர்மகர்த்தா பதவி முதல், கூட்டுறவு பாங்கின் தலைவர் பதவி வரையில் பத்தாண்டுக்காலமாக வகித்து வரும் பெரிய மனிதர். தன் ஒரே பிள்ளை முத்து சென்னையில் டாக்டர் வேலைக்காகப் பயில்வதைப் பெருமையோடு பலரிடம் சொல்லி வந்தார். அதோடு அவனுக்கு மணம் முடிக்கவேண்டிய அவசியம் பற்றிச் சொல்லி வலை வீசிக் கொண்டு வந்தார். தன் பிள்ளையின் படிப்பிற்காகத் தான் செலவு செய்த பணத்தோடு வட்டியுஞ் சேர்த்து மருமகள் கழுத்துக்கு நகை கேட்டு வந்தார்.

பூங்கோதையின் தந்தை சீமான் சிங்காரவேலர் தனக்கு வேறு வாரிசு இல்லாத காரணத்தால் தன் மகளை மிகவும் அன்போடு வளர்த்தார். இவர் தன் மகளின் திறமையோடு தன் செல்வத்தின் அளவையுங் காட்டி வரன் தேடுவதில் முனைந்திருந்தார்.

சிங்காரவேலரும் முருகேசபிள்ளையும் ஒரு வகையில் தூர உறவினர் தானென்றாலும், தர்மகர்த்தா பதவி காரணமாக எழுந்த பகை தணியாதவாறு பாங்குத் தலைவர் பதவிப் போட்டி அப்படியே நீடிக்கச் செய்த காரணத்தால், இருவரும் கலந்து பேச வாய்ப்பில்லாமல் இருந்து வந்தது.

பலம் குன்றியதால் நலம் குறைந்து, ஆதவன் உதித்தால் எழுந்து காபி குடித்து, உச்சி வந்தால் உணவருந்தி, இரவு வந்தால் பலகாரம் சாப்பிட்டுப் படுக்கைக்குச் சென்று, வீட்டுக்கு வரவேண்டிய மருமகளுக்காகவும், மருமகனுக்காகவும் நினைவலைகளை செலவிட்டவளாய் காலங்கழித்து வந்தாள் மங்களம். சமையல் அறை வேலைகளைத் தாயிடமிருந்து வாங்கிக் கொண்டாள் கண்ணம்மா. எனினும் படிப்பை விடாமல் தொடர்ந்து கற்றுவந்தாள்.

கண்ணம்மா உயர்தர பாடசாலையின் இறுதிப் பரீட்சையில் தேர்வு பெற்றாள். தன் தங்கையைக் கல்லூரியில் சேர்க்க வேண்டுமென்று ஆவலுற்றான் கண்ணன். ஆனால் பொருளாதாரம் இடந்தரவில்லை. ஏதாவது தொழில் படிப்புக்கு அனுப்ப வேண்டுமென்று விரும்பி முயன்றான். கடைசியாக 'நர்ஸ்' படிப்பிற்கு மனுச் செய்து பெரும் முயற்சி எடுத்து இடம் கிடைத்தது. கண்ணம்மா சென்னைக்குப் பயணமானாள்.

பூங்கோதையும் பரீட்சையில் தேர்வுபெற்றாள் என்றாலும், கல்லூரிக்குப் போக ஆசையும், வசதியும் இருந்தும், அவளின் தாய் தந்தையர் அனுப்ப மறுத்துவிட்டார்கள். கண்ணம்மா சென்னை சென்றதும் பூங்கோதை வழக்கம்போல அவள் வீட்டிற்குச் செல்லமுடியவில்லையென்றாலும், சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் சென்றாள். கண்ணனைச் சந்தித்தாள். இவர்களுக்கிடையில் தபால்காரன் தூதுவன் ஆனான். இப்படி மூன்றாண்டுகள் ஓடின!

சீமான் சிங்காரவேலர் தன் மகள் திருமணம் பற்றித் தீவிர கவனம் செலுத்தினார். மாப்பிள்ளை தேடி அலைந்தார். இடம் பிடித்தால் குணம் பிடிக்கவில்லை. குணம் பிடித்தால் பணம் சரிப்படவில்லை. எல்லாம் பிடித்திருந்தால் 'ஜோஸ்யரின்' அனுமதி கிடைக்கவில்லை. இதேபோல்தான், முருகேசபிள்ளையும் தன் மகன் முத்துவின் திருமணம் குறித்துப் பெண்தேடி அலைந்தார். சாஸ்திரியின் சம்மதம் கிடைக்காததால் இவர் தன் மருமகள் யார் என்று நிச்சயிக்காமல் இருந்தார். இவர்கள் இருவருக்



கூடுமே பொருத்தமான இடம்கிடைக்காமற் போனதற்குக் காரணம், சாஸ்திரியாரின் திறமைதான். தனக்கு வரவேண்டிய தொகை கூடுதலாகக் கிடைக்கவேண்டும் என்பதற்காகத் திட்டமிட்டு வேலை செய்தார். பொருத்தமில்லை, பொருத்தமில்லை என்றுசொல்லிக்கொண்டே வந்து, பிறகு முருகேச பிள்ளையையும் சிங்காரவேலரையும் சம்மந்திகளாக ஆக்கினால், தொகை நிறையக் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு வேலை செய்தார். முயற்சித்தார். ஆரம்பம் 'முகாரி'யாக இருந்தது... மீண்டும் முயற்சித்தார்...... தொடர்ந்து முயற்சித்தார். சுரம் குறைந்து வந்து இறுதியில் 'மோகனமாக' மாறியது. ஒவ்வொருவரிடம் இருந்தும் ரூபாய் ஆயிரம் தன் தரகென்று நிச்சயித்து, அதற்காக அச்சாரமும் வாங்கிவிட்டார். திருமணம் நிச்சயமாகியது. சாஸ்திரியார் முன்னிலையிலேயே இருவரும் திருமணத் தாம்பூலம் மாற்றிக்கொண்டனர்.



முருகேசபிள்ளை இந்தச் சேதியைத் தன் மனைவியிடம் சொல்ல விட்டு ஓடினார், உரைத்தார். இருவரும் திருமணச் சேதிபற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது தபால்காரன் வந்தான். முருகேசபிள்ளை வாங்கிப் படித்தார். முத்துஎழுதிய அந்தக் கடிதத்தில், தனக்கு 'அமரிக்கா சென்றுபடிக்க' சர்க்கார் மான்யமும் அனுமதியும் கிடைத்திருக்கிறதென்றும், அடுத்த வாரமே விமானம் ஏறவேண்டும் என்றும்எழுதியிருந்தான். இதைப் படித்ததும் அதிர்ச்சியுற்றார். திருமணத்துக்கு நாள் குறிக்கவில்லை என்றாலும், இந்தச் சம்மந்தத்தை இழக்க அவர் விரும்பவில்லை. மகன் அமரிக்கா போவதாய் அறிவித்துள்ளானே யொழிய, அனுமதி கோரவில்லை! என்ன செய்வதென்று புரியாது சிலையானார்!!

"இந்த வாரத்திலேயே திருமணத்தை முடித்தாலென்ன?'' என்று அவர் மனையாள் கூற, இருளைக் கிழித்த மின்னல்போல் இந்தயோசனை அவருக்குத் தைரியம் தந்தது. புறப்பட்டார். பறந்தார் சாஸ்திரியாரின் வீடு நோக்கி. விளக்கினார் நிலைமையை. விளங்கிக்கொண்டார் சாஸ்திரியாரும். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த அவருக்கா சொல்லிக்கொடுக்க வேண்டும்? மீன் குட்டி நீந்துவதில் ஆச்சரியப்பட என்ன இருக்கின்றது? அவர் மூளை சுறுசுறுப்பாய் வேலை செய்யத் துவங்கியது. சாஸ்திரியார் தன் தரகை உயர்த்துவதற்காக நாளையும் நட்சத்திரத்தையும் துணைக்கு அழைத்தார்.

இந்த நிலையில் சிங்காரவேலர், தான் நிச்சயித்துள்ள திருமணச் சேதியை தன் மனைவியிடமும் மகளிடமும் சொல்ல ஓடினார். சொன்னார். அவர் மனைவி மகிழ்ச்சி தெரிவித்தாள். ஆனால் அவர் மகள்? பூங்கோதை...! மின்னலைப் பார்த்தவள்போல் திடுக்கிட்டுத் திகைத்து நின்றாள். அவள் நிலையறியாது சிங்காரவேலரும் அவர் மனைவியும் திருமண ஏற்பாடுகள் பற்றிப் பேசத் துவங்கினர். கேட்டுக்கொண்டிருந்த பூங்கோதை மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தாள். தாய் தந்தையர் இருவரும் அவளைப் படுக்கைக்குக்கொண்டுபோய்ச் சேர்த்து மயக்கம் தெளியச்செய்தனர். மயக்கம் தெளிந்த பூங்கோதை தன் தாயைக் கட்டிப் பிடித்துக்கொண்டு "திருமணம் வேண்டாம்! அம்மா இந்தத் திரு[illegible]ண்டாம்'' என்று கதறத் துவக்கினாள். ஒன்றுமே புரியாத சிங்காரவேலர் விபரம் என்னவென்று விசாரிக்கும்படி தன் மனைவிக்குச் சைகைகாட்டிவிட்டு வெளியில் வந்தார்.

தபால்காரன் வந்தான். வழக்கமாகக் கொடுக்கும் கடிதத்தைக் கொடுத்துவிட்டுப்போனான். தனக்கு ஏற்பட்டுள்ள அதிர்ச்சி காரணமாகக் கடிதத்தின் முகவரியைக் கவனியாமலேயே பிரித்தார். படித்தார். "ஆசைக் கிளியே!'' என்று ஆரம்பம் ஆகியுள்ள அந்தக் கடிதம் அவருடைய அதிர்ச்சிக்கும், பூங்கோதையின் கதறலுக்கும் பதில் சொல்லியது. திடுக்கிட்டார். அவரின் உள்ளம் எரிமலையாகி ஓடினார் உள்ளே. பாதி மயக்கம் தெளிந்தும் தெளியாததுமாக இருந்த மகள் மீது வீசினார் கடிதத்தை. "சண்டாளி, சதிகாரி'' என்ற பல்லவியோடு அவரின் கோபம் கொப்பளிக்கத் துவங்கியது. ஏசல் வார்த்தைகளால் அர்ச்சித்தார். "நான் நிச்சயித்த திருமணத்தை நடத்தியேதீருவேன்'' என்று சூளுரைத்தார். துண்டைத் தோளில் போட்டு விரைந்தார்.

திருமணத்தை விரைவில் நடத்தத் திட்டமிட்டுக் கொண்டிருந்த சாஸ்திரியாரும் முருகேச பிள்ளையும் கடைசியாக ஒரு முடிவிற்கு வந்தனர். சாஸ்திரியார் சிங்காரவேலர் சம்மதத்தைப் பெறவும், இராசிபலனைச் சரிக்கட்டவும் தாகுபேசி முடித்தார். முருகேச பிள்ளையை வீட்டிற்குப் போகும்படி கூறி, சிங்காரவேலர் வீடுநோக்கிப் புறப்பட்டார். சாஸ்திரியாரை எதிரிலேயே சந்தித்தார், பதட்டமும் கோபமும் நிறைந்தவராய் வந்த சிங்காரவேலர் திருமணத்தை விரைவில் நடத்தியாக வேண்டும் என்று கூறிச் சாஸ்திரியார் கையில் இரண்டுநூறு ரூபாய் நோட்டுகளை வைத்தார். சாஸ்திரியார் தயங்குவதுபோல் பாசாங்கு செய்தார். மற்றொன்று அவர் கைக்கு வந்தது. "நாள் கூடி

வராதே'' என்றார். மற்றொன்றும் வந்தது. முயற்சிப்பதாகக் கூறினார். இன்னொன்றும் வந்தது. 'முடித்துடுறேன்' என்று கூறிப் புறப்பட்டார் முருகேசபிள்ளை விடு நோக்கி. அங்கே தனக்குச் சேர வேண்டிய நரகைவாங்கிக்கொண்டு பஞ்சாங்கத்தை எடுத்தார். நாள் குறித்தார். திருமணத்தின் நாள் அடுத்த நான்காவது நாள் என்று நிச்சயித்தார்.

சம்மந்தியாரின் சம்மதத்தைப் பெற்றுப் புறப்பட்டார் முருகேச பிள்ளை சென்னைக்கு. கையோடு மகனை அழைத்துவந்து திருமணம் செய்தான பிறகு அமரிக்கா அனுப்பத் திட்டமிட்டிருந்தார்.

பூங்கோதையின் நிலையைக் கண்ணன் அறியான். அவன் தாய் மங்களம் நோய்வாய்ப்பட்டதால், அதற்கான காரியங்களில் ஈடுபட்டிருந்தான். வழக்கமாக வரவேண்டிய கடிதம் வராததால் மிகவும் வருந்தினான் என்றாலும், தாயின் அருகிலேயே இருந்து தீரவேண்டியவனானான். அதனால் தான் பூங்கோதையின் திருமண ஏற்பாட்டைப் பற்றி அறியாதவனாயிருந்தான்.

பூங்கோதையின் குருதியெல்லாம் கண்ணீராகிப் பெருக்கெடுத்தது. அவளுடைய கதறலும் கெஞ்சலும் அவளுக்குப் போடப்பட்டிருந்த காவலைப் பலப்படுத்தியதே யொழியப்,பெற்றோர்களின்நெஞ்சை இளகச்செய்யவில்லை. தன் மன உறுதியைக் கண்ணீர் மூலம் காட்டினாள். அவர்கள் தங்கள் மன உறுதியைக் கோபத்தின்மூலம் வெளிப்படுத்தினர். அறையிலே சிறைவைக்கப்பட்டு அடைபட்டிருந்த அந்தப் பைங்கிளியின் அழு குரல் கூட அடுத்த வீட்டிற்குக் கேட்காதவாறு கண்காணித்தனர். கண்ணீரால் இந்தச் சமுதாயம் திருத்தப்படுவதாயிருந்தால் எப்போதோ திருந்தியிருக்க வேண்டுமே! அறியாமல்தான் பூங்கோதை அழுதாள். தன் பெற்றோரின் மனதைத் தன் கண்ணீர் மாற்றிவிடும் என்று நம்பினாள். மகளின் கண்ணீருக்காகப் பெற்றோர்கள் தங்கள் கொள்கையை மாற்றிக்கொள்வதில்லையே! அதனால்தானே முருகன் கூட, வள்ளியைச் சிறையெடுக்க நேர்ந்ததாம்! அணை உடைந்த ஆறுகியது அவள் கண்கள். வாய்திறந்த எரிமலையாகினர் அவள் பெற்றோர்கள்.

(தொடரும்)

7-ம் பக்கத் தொடர்ச்சி

நாளடைவில் நடனம் என வழக்குப் பெறலாயிற்று. கூத்திற்குரிய பலவகை நூல்கள் அக்காலத்து வழக்கிலிருந்தன. பாடல்பெற்ற பல கோயில்களில் நடனமாதரிருந்து சமயத்தொடர்பாக நடனக் கலையை நன்கு வளர்த்து வந்தனர் என்பது எண்ணிறந்த கல்வெட்டுகளால் அறியப்படுகின்றது. அவர்தம் கலைச் சிறப்பைப் பின்வரும் பாடலைக்கொண்டு நன்கு அறியலாம்.

'கற்பகப்பூந் தளிரடி போய்க்
காமருசா ரிகை செய்ய
உற்பலமென் முகிழ்விரல்
வட் டணையோடும் கை பெயரப்
பொற்புறும் அக் கையின்வழிப்
பொருகயற்கண் புடைபெயர
அற்புதப் பொற் கொடி நுடங்கி
ஆடுவதுபோல் ஆடினார்'.

நாடகக்கலை

இது கற்றவர் கல்லாதவர் என்னும் இருதிறத்தாரையும் தன் வசப்படுத்த வல்லது. மக்களுக்கு நல்லறிவை ஊட்டி, ஒழுக்கத்தை வளர்க்க வல்லது. இக்கலை முதலில் சமயத் தொடர்பாகவே ஏற்பட்டது என்பது அறிஞர் கருத்து. நாடகத்திற்றான் பாட்டு, வசனம் நடனம் என்பன கலந்து வருகின்றன. ஆதலின் இக்கலை தமிழகத்தில் மிகுதியாக வழங்கப்பட்டது. இராசராசேச்சுவர நாடகம், பூம்புலியூர் நாடகம், சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம், என்பன பிற்காலத்தில் நடிக்கப்பட்ட நாடகங்களிற் சிறந்தனவாகும் [illegible]க ஆசிரியர்கள் பிற்காலச் சோழர் முதலிய தமிழரசரால் நன்கு போற்றப்பட்டனர் என்பதைக் கல்வெட்டுக்களால் அறியலாம். சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகரால் செய்யப்பட்டது. அந் நாடகம் இன்னும் ஆண்டுதோறும் தஞ்சைப் பெரியகோயிலில் நடிக்கப்பட்டு வருகிறது.

முடிவுரை

நாகரிக உணர்ச்சி தோன்றிய நாள்தொட்டுத் தமிழகத்தில் இம் மூன்று கலைகளும் வளர்பிறை போல வளர்ந்து வந்தன என்பதை இலக்கியங்களும், கல்வெட்டுக்களும இனிது உணர்த்துகின்றன.

★

விந்தனின் நிந்தனை

ஆக்க வேலைகளில் இறங்கிக் காரியமாற்றுவதைவிடச் சிலருக்கு ஆகியவேலைகளைப்பார்த்துவலிந்து குறை கூறுவதுதான் பிடித்தமான செயலாக இருக்கிறது. இதைத்தான் கிராமப்புறங்களில் "கட்டிய வீட்டிற்கு நோட்டம் சொல்லுதல்" என்பார்கள். "ஐயா! இதுதான் நான் புதிதாகக் கட்டிய வீடு! அதோ அதுதான் சமையலறை, இதோ இருப்பதுதான் முற்றம், இது வாசல், அங்கிருப்பதுதான் படுக்கையறை" என வீடு பார்க்கவந்தவரிடம் வீடு கட்டியவர் கூறுகிறார். அவர் அவ்வாறு கூறிவரும்போதே, அவர் வீடுகட்டுதற்குச் செலவிட்ட பணம், அதைத் தேட அவர்பட்ட இன்னல்கள், கட்டி முடிக்கும்வரை இரவு பகல் பாராது உழைத்த உடலுழைப்பும் உள்ள உழைப்பும் அவர் முகத்தில் தேங்கி நிற்கிறது. இதற்கெல்லாம் பரிசாக, பார்க்க வந்தவர் தன் நிலையையும் வீட்டின் நிலையையும் ஒப்பிட்டு மதித்து மெச்சுவார் என எண்ணி நிற்கிறார். ஆனால் பார்க்கவந்தவரோ "ஓகோ! அதுதான் முற்றமோ? இன்னும் கொஞ்சம் பெரிதாயிருக்கலாமே? சமையலறை கூடச் சாதாரணமாகத்தானே இருக்கிறது? ஏன் மாடிவைத்துக் கட்டவில்லை? இதற்குத்தானா இத்தனை நாள்?" என்று கூறினால் வீட்டுக்காரரது உள்ளம், வீடே இடிந்து விழ்வது போன்று இடிந்துவிழாமல் என்ன செய்யும்?

"அவதூறு" செல்லும் வண்டிக்கு மைபோட ஆள்பஞ்சம் உண்டாவதில்லை என்று ஷேய்டா என்பவர் கூறியிருப்பதுபோல, இவ்வாறு ஆகிய வேலைகளை நிந்தனை புரிந்து, பயனில்லாத சொற்களால் எழுதியும் பேசியும் வருபவர்கள் இன்று நாட்டில் மலிந்து வருகின்றனர். காரணம் இத்தகைய வேலைகளில் ஈடுபடுவதற்கு, திறன் பெற்றிருக்க வேண்டுமென்ற அவசியம் சிறிது கூட இல்லை. நிந்தனையுள்ளம் பெற்றிருந்தால் அதுவே அவர்களுக்கு மூலதனம்; ஏதோ பிழைப்பும் நடக்கும்.

ஒருவனை நேருக்கு நேர் நின்று "மடையனே!" "முட்டாளே!" என்ற சுடுசொற்களால் வசைமாரி பொழியலாம். வலிமையுள்ளவனாயிருந்தால் பலத்தைக் காட்டுவான். அற்றவனாயிருந்தால் மற்ற வழிகளில் சந்தித்துக்கொள்ளுவான்.

அன்பு

ஆனால் அவனையே, மறைந்தோ தூர விலகி நின்றோ மிதமான சொற்களால் அவனது தூய நடவடிக்கைகளைக் கேலிகள் பல புரிந்து அவதூறு செய்தால், தனது மாசில்லாக் கோட்பாடுகள் இப்படிப்பட்ட மதியிலிகளால் தவறாகவே, அதாவது, வேண்டுமென்றே புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது என மனம் நோகாமல் என்ன செய்வான்? "யாரேனும் குறை கூறினால் அது உண்மையாயின், திருந்திக்கொள்; பொய்யாயின் நகைத்துவிடு" என்று எபிக்டெட்டஸ் என்ற தத்துவ ஞானி கூறினனே, அதைத்தான் அவன் அந்த நேரத்தில் கடைப் [illegible] வேண்டும்.

தமிழகத்தில் பேனாபிடித்திருக்கும் எழுத்தாளர்களில் விந்தன் என்பவரும் ஒருவர். இவர் கல்கியில் (31—5—59) ஒரு சிறுகதை எழுதியிருந்தார். திருந்திவரும் தமிழகத்தின் சில நடைமுறைகளைக் கருவாக அமைத்து "திருந்திய திருமணம்" என்ற சிறுகதையொன்றைத் தந்திருந்தார். தற்காலத்தில் திராவிடரியக்கம் பரப்பிவரும் சீரிய சமுதாய, மொழித்துறைக்கொள்கைகளைக்கேலிக்குரிய கருப் பொருளாகக்கொண்டு 'கிண்டல்'கள் பல புரிந்திருந்தார். அறிவுக்குப் பொருந்தும் புதுமைகள் பல பூக்கும் இக்காலத்தில் வாழுகிறோமே என்று பெருமை கொள்ள வேண்டிய இந்தப் பேனாபிடித்தவர், மாறாக புதுமைக் கருத்துக்கள் பலவற்றை நிந்தனையுள்ளத்தோடு கேலிகள் செய்திருந்தார். தற்காலத்தில் நிகழ்ந்துவரும் நல்ல தமிழ்ப் பெயர் மாற்றங்களும் திருந்திய திருமணங்களும் இவரது உள்ளத்தை உறுத்திற்றோ என்னவோ?

பரிதாபப்படவேண்டியவர்! இவரது 'திறனாய்வு' இத்துடன் நின்றிருக்கக்கூடாதா? நல்ல தமிழில் பேசுவதும் எழுதுவதும் இவருக்கு ஏன் இத்தனை பரிகாசத்துக்குரியசெயலாகப்படுகிறதோ? ஒழுங்கான முறையில் சந்தனம் பூசிக்கொண்டிருப்பவனை எப்படியாவது பரிகசிக்க வேண்டுமென்று நிறைமதியில்லா ஒருவன் அதே சந்தனத்தை எடுத்து வேறு எங்கெங்கோ பூசிக் காட்டுவதோடு நிறுத்தாமல், முதலவனை இதன் மூலம் கேலி புரிகிறோம் என்று வேறு தன்னுள் நினைப்பானே

யானல், அவனைப்பற்றி நாமென்ன நினைக்க?

கதையில் வரும் சிகாமணி என்ற இளைஞன் திருந்திய திருமணம் தான் செய்துகொள்ளுவேன் என்று அவனது ஆசிரியர் அறிவழகனார் என்பவர் தந்தஅறிவுரையின் பேரில் பெற்றோர்களிடம் பிடிவாதம் செய்கிறான். தந்தை சம்மதிக்கிறார்—அவருக்குப் பிடித்த சில திருத்தங்களுடன். ஆனால் அதற்கிடையில் சிகாமணி, தான் விரும்பிய பெண்ணுடன் ஒருவருக்கும் தெரியாமல் வெளியேறிவிடுகிறான். இது கதைச் சுருக்கம். இங்கு நமக்குக் கதையம்சம் முக்கியமல்ல; ஒரு பிரச்சினையுமல்ல. ஆனால் அக் கதையில் வரிக்கு வரி எழுத்துக்கு எழுத்து அள்ளித் தெளித்திருக்கும் கேலி மொழிகள் தான்அவரது 'திறனய்வு' உள்ளத்தைப் பற்றி இங்கு சிறிது கூற வைக்கிறது.

கதையில் வரும் இளைஞனுக்குச் சிகாமணி என்று பெயரிட்டிருக்கிறார் ஆனல் வேண்டுமென்றே ஏதோ தவறிவிட்டவர் போன்று கதையில் ஒவ்வொரு இடத்திலும் "சிகாமணி—அல்ல அல்ல—முடிமணி" என்ற திருத்தம் கொடுத்துப் பாத்திரங்களைப் பேச வைத்திருக்கிறார். கதை முழுவதிலும் இதேபோன்று வலிந்து எழுதியிருக்கிறார். தற்காலத்தில் நிகழும் நல்ல தமிழ்ப் பெயர் மாற்றங்களைத் தான் இவ்வாறு, தமிழுக்குச் செய்யும் துரோகமாக நினைக்காமல் ஏதோ மறுமலர்ச்சி இயக்கங்களைக் கேலிபுரிகிறோம் என்ற கோழை உள்ளத்தில் எழுதியுள்ளார். மக்கள் ஆங்காங்கே பெருகிவரும் தமிழுணர்ச்சியினல் தங்கள் பெயர்களை நல்ல தமிழில் மாற்றியமைத்துக் கொள்வதை இவ்வாறு கேலி புரிவது, நாம் புதிதாகக் கேட்பதல்ல. இது சாதாரண விந்தனிடமிருந்து கிளம்புமுன்னரே 'பெரிய' மந்திரிகளிடமிருந்தெல்லாம் கிளம்பியிருக்கிறது.

"சிறுவயதில் தங்கள் தாய்தந்தையர்கள் வைத்த பெயர்கள் சரியில்லையென்று இங்குள்ள நூறு பேர் தங்கள் பெயர்களை மாற்றி வைத்துக்கொண்டனர்" என்ற பார்மோசாச் செய்தியையும், "பிரெஞ்சு மொழியில் ஏராளமான ஆங்கில வார்த்தைகள் சலந்து வருவது கண்டு அதைத் தடுப்பதற்காக 3500 பேர் சேர்ந்து ஒரு இயக்கம் அமைத்திருக்கிறார்கள். ஏப்ரல் முதல்தேதி முதல் பல வாரங்களுக்குப் பிரான்சில் வெளியாகும் தினசரி ஏடுகளில் எது குறைந்த அளவுக்கு வெளிமொழிக் கலப்பை உபயோகப்படுத்துகிறதோ, அதற்குப்பரிசு வழங்கவும் முடிவு செய்துள்ளார்கள்" என்ற பிரான்சுச் செய்தியையும் விந்தன் போன்றவர்களின் திருந்தவேண்டிய உள்ளங்களுக்குச் சிந்தனையாக அளிக்கிறோம்.

தற்காலத்தில் நிகழ்ந்து வரும் திருந்திய திருமணங்கள் இவருக்கு ஏன் இவ்வளவு கேலிக்குரிய நிகழ்ச்சிகளாகப் பட்டதோ தெரியவில்லை! விந்தனிடம்தான் பேனு இருக்கிறதே, அவர் வேண்டுமானல், திருந்திய திருமணங்களைவிடச் சனுதனத் திருமணங்களும் அதில் நிகழும் நிகழ்ச்சிகளும் எந்தெந்த வழிவகைகளின் பகுத்தறிவுக்குப் பொருத்தமானது என்பதை எழுதிக் காட்டட்டும்? காரண காரியங்கள் எங்கே மறைகின்றனவோ அங்கேதானே கேலியும் கிண்டலும் எழக்கூடும்!

இங்கு விந்தனுக்காக மட்டுமே, நாம் இவ்வாறு காலத்தையும் ஏட்டையும் வீணுக்கவில்லை. இது போன்று, புதுமைக் கருத்துக்களை உருவாக்கிப் பரப்பத் தெரியாவிடினும், பரப்பிய கொள்கைகளையும் பழக்கங்களையும் இகழ்ச்சியாவது செய்யத்தெரிந்த பலர் தொடர்ந்து வளர்ந்து கொண்டிருப்பதால்தான் இங்கு இதை எழுத நேர்ந்தது. 'பகுத்தறிவுக்கும் பண்பாட்டுக்கும் ஒத்த புதுமைப் பழக்க வழக்கங்கள் மலிந்து காணப்போகும் எதிர்காலம் நெருங்கி வரப் போகிறது. அதன் விரைவில் நீங்களெல்லாம் அடித்துச் செல்லப் படப் போகிறீர்கள்' என்பதை அத்தகையவர்களுக்கு எச்சரிக்கையாக இந்நேரத்தில் கூறிக்கொள்வோம். இவ்வாறு, உண்மையின் அடிப்படையிலும் பகுத்தறிவின் முறையிலும் மாறிவரும் சமுதாயப் பழக்க வழக்கங்களை நிந்தனையுள் எம்கொண்டு தூற்றிப் பிழைப்பு நடாத்திவரும் கூட்டத்தினரின் பார்வைக்கும் சிந்தனைக்கும் ஆங்கிலப் பேரறிஞன் கார்லைல் கூறிய மணிமொழிகளை வைக்கிறோம்.

"நிந்தனை :" அதனுேடு விளையாடினல் ஆபத்து. அதனுேடு வாழ்ந்தாலோ அழிவேதான்.

நாட்டைப் பாதுகாக்கக் கூடியவர்கள் மட்டுமே எதிரிகளை ஏமாற்றுவதற்கோ அன்றி அந்நாட்டின் நலத்திற்காகவோ பொய் சொல்லலாம். ஆனல் தனிப்பட்டவர்கள் பொய் சொல்லக்கூடாது.

*

ஒருவன் வயது ஆக ஆகத்தான் தீமையின் தன்மையை அறிந்துகொள்ளுகின்றான். ஆகையால்தான் நீதிபதிகளெல்லாம் வயதானவர்களாக இருக்கவேண்டும் என்ற கொள்கை கடைப்பிடிக்கப்படுகின்றது.

4-ம் பக்கத் தொடர்ச்சி

சரியான ஊதியம் கிடைக்கவில்லையே என்று கதறும் தொழிலாளியும், பாடுபட நிலமில்லையே எனப் பதறும் விவசாயியும், இன்னும் இருக்கிறார்கள்! இதையெல்லாம் விட, தன்னாடு தனியாகவேண்டும், டில்லி தர்பாரின் பிடியிலிருந்து விலகவேண்டும் எனும் ஆர்வம், ஒவ்வொரு குடும்பத்தாருக்குள்ளும் பரவி வருகிறது! இந்தச் சுதந்திர ஆர்வத்துக்கு, யார் என்ன பதிலைத் தரமுடியும்? ஏசலாம், ஏ! இந்தியாவைப் பிரிக்கச் செய்யும் சதியெனப் பேசலாம். எனினும் வளர்ந்து வருகிறது சுதந்திரவேட்கை! பிரியலாமா என்று பிரியமொழி காட்டுகின்றனர். உரிய இடத்தைத் தமிழுக்கு அளிப்பதாகக் காட்டிக்கொள்ளுகின்றனர். ஆனால் இதோ இந்தி, காசு, உத்தியோகம் முதலிய துறைகளில் நுழைந்தது போதாதென்று "மைல் கற்களிலும்" ஒயிலாட்டம் போடுகிறது! இதைக்கண்டு மக்கள் மன்றத்தில் எழும் ஆத்திரத்துக்கு என்ன பதிலைச் சொல்லமுடியும், காங்கிரசுக்காரர்கள்? புதிய விழிப்பு! புதிய திருப்பம்! புதியன காணும் ஆவல்! பொல்லாதோர் கையில் நாடு சிக்கிச் சீரழிகிறது. எனும் சலிப்பு! — அத்தனையும், உருவாகியிருக்கிறது தென்னாட்டில். இதனை எவரே மறுக்க இயலும்? இவர்களது ஆட்சியின் கோணலை, இவர்களின் தலைவராக இருந்த ஆச்சாரியாரே கண்டிக்கிறார்! நிர்வாகத் திறமையற்றோர் என்கின்றனர், அவர் போன்றோர்!!

தலை பூராவும் ஈரும் பேனும் ஓடுகிறது—சந்தனம் பூசிக்கொண்டுள்ளவளன்றோ நான் என்கிறாள் ஒருத்தி. சந்தனம் வாசனையைத் தரலாம்! பேசும் பேச்சின் ஒலி, எங்கும் கேட்கலாம்!!—ஆனால், ஓடும் ஈரையும் பேனையும் விரட்ட என்னசெய்தது காங்கிரஸ்! என்ன செய்யப்போகிறது காங்கிரஸ்?—என்று நாட்டு மக்கள் கேட்டுக்கேட்டுப் புதுவழி செல்லத் துவங்கி விட்டனர்! புரிகிறார் அமைச்சர். அடுத்த தேர்தலில் காங்கிரசை வெற்றியடையச் செய்வதற்காக இப்போது 'அதிர்ச்சியை' அளித்திருக்கிறார்கள் என்று!!

அமைச்சர் ஆனந்தம் பெறட்டும் — காங்கிரஸ் காரர்களுக்கு வேலை செய்யவேண்டுமெனும் வெறியை உண்டாக்கட்டும் — அவர்களும் ஓடியாடி வேலை செய்யட்டும். இப்போது அமைக்கப்பட்டுள்ள வட்ட காங்கிரஸ் கூடங்கள் என்ன வேலை செய்வதென விழிக்கும் அழகு நாட்டுக்குத் தெரியும்! சட்டிக்குள்ளிருந்தால் தானே அகப்பையில் வரும் என்று தாய்மார்கள் பழமொழி சொல்வார்கள். சட்டி, காலியாகி எவ்வளவோ நாட்களாகிவிட்டன. சட்டியும், இப்போது சீமான்களின் வசம் தரப்பட்டு, ஓட்டை உடைசலோடு விளங்குகிறது. இந்நிலையில், அதில் எதுவைத்தாலும் ஒட்டாது! இதையே அடைக்கப்பட்டுள்ள காங்கிரஸ் வட்டாரச் சங்கங்கள் மெய்ப்பித்து வருகின்றன!! இந்த இலட்சணத்தில், காங்கிரசை மக்களிடம் கொண்டு செல்லப்போகிறார்களாம். மதிப்புக்கொடுக்க மறுப்பரோ தமிழகத்து மக்கள் எனும் பயத்தில் விரைவில் இந்திரா நேருவைக் கொண்டுவந்து ஊர் ஊராகச் சுற்றவைக்கப் போகிறார்களாம்! தோற்றது ஏன்?— என்பதற்கான உண்மையான காரணத்தை அறிவதில் நேரத்தைச் செலவழிக்கவில்லை. ஒருவேளை அறிந்து, களைந்து, காங்கிரசுக்குச் செல்வாக்குத் தேடுகிறார்களோ என்று வைத்துக்கொள்வோம். தனியாகப் பிரிய வேண்டுமென்கிற தாகத்துடன் உலவுகின்றனரே, தென்னகத்திலுள்ள இலட்சக்கணக்கான குடும்பங்கள்! அவைகளுக்கு என்ன பதிலைச் சொல்லும் இந்தக் காங்கிரஸ்!! வளரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின், உரிமைக் குரலை அடக்கவும் மறைக்கவும், இனி முடியாது, ஆதிக்கபுரியினரால். வேண்டுமானால், நேரு போன்ற பெரியவர்களை இறக்குமதிசெய்து, திராவிட முன்னேற்றக் கழகத்தை, இப்போதுபோலத் தாக்கச் செய்யலாம்! தாக்கத் தாக்கத்தான் வளர்ந்து இன்று, இந்த நிலையை அடைந்திருக்கிறது நமது கழகம்! காங்கிரசார் மேற்கொண்டு இந்தப் பணியில் ஈடுபட ஈடுபட, இன்னும் பல கிளைகள் துவங்கும்! எங்கும் கழக முரசு ஒலிக்கும்! திராவிடமுன்னேற்றக் கழகம், ஒரு விடுதலை இயக்கம். இதனை அழிக்கவும், அடக்கவும் எந்தச் சக்தியாலும் இனி முடியாது. உறுதி! உறுதி!! உறுதி!!!

★

டாக்டர் எஸ். தருமாம்பாள்

பெண்கள் உயர்நிலைப்பள்ளி

(துவக்கம் 1958)

வீரத் தமிழ் அன்னை டாக்டர் எஸ், தருமாம்பாள் பெண்கள் உயர்நிலைப் பள்ளி சென்னைப் பெத்துநாயக்கன் பேட்டையில் நிறுவ எண்ணி- அப்பள்ளியை உருவாக்க மேற்படி செயற் கூட்டம் சென்னை பிரம்ம சமாஜ மண்டபத்தில் 135, அண்ணாப்பிள்ளைத் தெரு, 6—6—59 சனிக்கிழமை மாலை 7 மணிக்கு டாக்டர் எஸ். ஜி. மணவாளராமானுஜம் அவர்கள் தலைமையில் கூடியது.

அதுபோது கீழ்க்கண்ட செயற்குழு நிறுவப்பட்டது:

சி. என். அண்ணாதுரை, எம். ஏ., எம். எல். ஏ., எம். ஜி. இராமச்சந்திரன், ஏ. கே. தங்கவேலர் காப்பாளர்களாகவும்.

டாக்டர் எஸ். ஜி. மணவாளராமானுஜம் முன்னாள் துணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அவர்கள் தலைவராகவும்.

நாவலர் இரா. நெடுஞ்செழியன், டாக்டர் பி. நடேசன், வெற்றிச்செல்வி அன்பழகன், டாக்டர் இரத்தினவேலு சுப்பிரமணியம் முதலியவர்கள் துணைத் தலைவர்களாகவும்.

டாக்டர் சத்தியவாணிமுத்து, எம். எல். ஏ., செயலாளராகவும்

சிறுவை மோகனசுந்தரம், சுந்தரி அன்பு கணபதி துணைச் செயலாளராகவும்.

அலமேலு அப்பாதுரை பொருளாளராகவும்.

பேராசிரியர் மயிலை சிவமுத்து, சி. என். மீனாட்சிசுந்தரம், எம்.ஏ., எல்.டி., டி. சண்முகம், தேவராசனார், அ. கிருஷ்ணமூர்த்தி, என். வி. நடராசன், கவிஞர் கண்ணதாசன், கலைஞர் மு. கருணாநிதி, எம். எல். ஏ., ஜி. எம். சமரசம், பி. எஸ். நடேசன், எம். எம். தண்டபாணி தேசிகர், எஸ்.எஸ். இராஜேந்திரன் முதலியோர் செயற்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மேலும் இடம், கட்டடம் பார்க்க ஒரு துணைக் குழுவும், பொருள் வசூலிக்க ஒரு துணைக் குழுவும் நியமிக்கப்பட்டது.

அந்த உணர்ச்சி!

—[சு. வெ. பாண்டியன்]—

"மத்திய ஆட்சி எங்களது கோரிக்கையைப் புறக்கணிக்கிறது. இதைப் பொறுத்தற்கில்லை; ஒறுப்போம்" என்று துள்ளிக் கிளம்பியிருக்கிறது உத்திரப்பிரதேச சர்க்கார்! ஏதோ கூட்டம் கூட்டி — பேசி — தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டு மாத்திரம் சும்மா இருந்துவிடவில்லை!

உத்திரப் பிரதேச முதலமைச்சர் இப்பிரச்சினைக்காகச் சட்டசபை உறுப்பினர்களை எல்லாம் அழைத்து ஆலோசனை நடத்தியிருக்கிறார். அக்கூட்டத்திற்குப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் "தனியாக" அழைக்கப்பட்டிருந்தனர். எல்லோரும் கூடி மத்திய சர்க்காரின் தவறான போக்கைக் கண்டித்திருக்கிறார்கள்!

எதற்காக இவ்வளவு "தடபுடல்" என்றால்-உத்திரப் பிரதேச சர்க்கார் மேற்கொண்டும் சில "சர்க்கரைத் தொழிற்சாலை"களை அமைப்பதற்கு மத்திய பீடத்தினரைக் கேட்டிருந்தனராம். "டில்லி" இதற்கு அனுமதி கொடுக்கவில்லையாம்! இதற்காகத்தான் மாகாணத் தலைமையமைச்சர் தலைமையிலே "டெல்லி"யை எதிர்த்துப் போர்க்குரல் எழுப்பப்பட்டிருக்கிறது!

"உத்திரப் பிரதேசம்" "டெல்லி"யின் ஒரு சக்தி வாய்ந்த அமைப்பாகும்! பாராளுமன்றத்தை அலங்கரிப் போரில் அதிகமானவர்கள்— இம்மாகணத்தவரே! மேலும் நேரு அவர்கள் போட்டியிட்ட தொகுதியும் இங்குதான் இருக்கிறது. மத்திய அமைச்சர்களில் பெரும்பான்மையோரும்; உயர் அமைச்சுத் துறைகளில் இருப்போரும் இவர்களேயாகும்!

இவைகளை எல்லாம்விட டெல்லியிலும், உத்திரப் பிரதேசத்திலும் கொலுவிலிருப்போர் காங்கிரசுக்காரர்களேயாகும்! உத்திரப்பிரதேச காங்கிரசு ஆட்சியினர், டெல்லிக் காங்கிரசு ஆட்சியினரை எதிர்க்கின்றனர்— தன் மாகாணக் கோரிக்கை தள்ளப்பட்டது கண்டு!

வேடிக்கையாக இருக்கிறது என்போம்! ஆனால் ஊன்றிக் கவனிக்குமிடத்து நம் போன்றோர்க்கு வேதனையாகவும் இருக்கிறது!

"பார்! பார்! வடக்கேயும் மத்திய ஆட்சியினரை எதிர்த்துப் பேசுகின்றனர். வஞ்சனை கண்டு கொதிக்கின்றனர். தி. மு. க.வினர் மாத்திரம் என் நம் மாகாணத்தில் மட்டும் இது நடப்பதுபோலச் சொல்லி, இதைத் திராவிடப் பிரிவினைக்கு ஆதாரமாகக் காட்டுவானேன் என்று பேசுவர் சிலர்! அவர்கள் அவசரக்காரர்கள்!

பொருளுக்கு வருவோம்! உ. பி.யின் கோரிக்கையைச் சாதாரணமானதாகக் கருதித் தள்ளிவிடவில்லை! உ. பி. யின் கோரிக்கையைக் கண்டதும் "டெல்லி" ஒரு நிபுணர் குழுவை அமைத்தது. அதுவும் உள்நாட்டுக்காரர்களாக இருந்தால் ஏதாவது ஏற்பட்டுவிடக்கூடும் எனக் கருதி வெளிநாட்டு நிபுணர்களை அழைத்துப் பரிசிலனை செய்ய அனுப்பியது.

அந் நிபுணர் குழுவின் முடிவுப்படிதான் "டெல்லி" மேற்கொண்டும் தொடர இருந்த தொழிற்சாலைகளுக்கு அனுமதி கொடுக்கவில்லை! விவரம் இப்படியிருந்தும் பெருங்கூப்பாடும், பெருமளவு விளம்பரமும் செய்யப்பட்டது. கனம் நேரு அவர்கள் தலையிட்டு மறு பரிசீலனைக்கு இதை விட்டிருப்பதினால்தான் இன்று அமைதி நிலவுகிறது.

சர்க்கரைத் தொழிற்சாலை விஷயத்தில் சற்று ஊடுருவிப் பார்ப்போம்! "இந்தியா" முழுதும் 140 சர்க்கரைத்தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஆனால் இவற்றில் 72 சர்க்கரை ஆலைகள் மாத்திரம் உ. பி. யில் இருக்கின்றன.

பம்பாய் ஏடான "காமர்சு" தனது பிப்ரவரிமாதம் 21ம் தேதிய இதழில் மேலும் சில விவரங்களைத் தந்திருக்கிறது. அதாவது 1958ம் ஆண்டு முடிய விரிவுபடுத்தப்பட்ட சர்க்கரை ஆலைகள் 68 என்றும், புதிதாக ஆரம்பிக்கப்பட்டவை 55 சர்க்கரை ஆலைகள் என்றும் புள்ளி விபரம் தந்துள்ளது. இதில் விரிவுபடுத்தப்பட்டுள்ள மொத்த 68 சர்க்கரை ஆலைகளுக்குள் 35 சர்க்கரை ஆலைகள் மாத்திரம் உ. பி.யில் உள்ளதாகும். இதேபோல் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 55 ஆலைகளில் 6 ஆலைகள் உ. பி.யைச் சேர்ந்ததாகும். 18 ஆலைகள் பம்பாயில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வளவு அதிக ஆலைகள் இருந்தும் குறிப்பிடத்தக்க உற்பத்தி இல்லை. 3—3—1959ம் தேதிய 'எக்ஸ்பிரசு' தலையங்கம் இதைத் தெற்றெனக்காட்டுகிறது. "இவ்வளவு அதிக எண்ணிக்கை, உற்பத்தியை மிகுதிப்படுத்திக் காட்டவில்லை என்பதோடு, பலவித இன்னல்களைத்தான் உண்டாக்கின" என்பதாக உ. பி. யின் ஒன்றுபட்ட கூக்குரலைக் கண்டிக்க வந்த ஏடு கூறுகிறது.

மேலும் மற்ற இடங்களில் உற்பத்தியாகும் கரும்பின் அளவைவிட உ. பி. யில் குறைவேயாகும். உ. பி. யில் ஒரு ஏக்கருக்கு 13 அல்லது 14 டன்கள் கரும்புதான் உற்பத்தியாகிறது. இதிலிருந்து சர்க்கரை ஆலைக்கு வேண்டிய மூலப்பொருளும் குறைவுதான் என்பது தெளிவாகும். (1—6—58ம் தேதிய 'இந்து' தனி வெளியீட்டில் உள்ள

படி) "காட்பீல்ட்" என்பவர் குறிப்பிட்டுள்ளபடி கூறப்போனால் (22—11—58 "இந்து" தனி வெளியீடு) அங்கு ஆலைகள் நெருக்கமாக இருப்பதாலும், உயர்ரக கரும்பு உற்பத்திக்கு வழியில்லாதிருப்பதாலும் ஏற்றுமதிக்குத் தகுந்த சர்க்கரை கிடைப்பதற்கு வழியில்லை!

இவ்வளவு குறைபாடுகள் இருந்தும்கூட, குறைபாட்டினூடே தனது சக்தியால் அதிக ஆலைகள் அமைக்கும் பேற்றைப் பெற்றிருந்தும்கூட இன்று முறைத்துப் பார்க்கிறது டில்லியை—உ. பி.

இதே சமயத்தில் நமது திராவிடப் பகுதியில் சர்க்கரை ஆலை அமைப்பதற்கான நல்ல சூழ்நிலை இருக்கிறது, 22—11—58ம் தேதிய 'இந்து' தனிவெளியீட்டில் இந்திய சர்க்கரை ஆலைத் தலைவர் குறிப்பிட்டுள்ளபடி கூறுவதானால், தென்னாட்டில்தான் நல்லரக ஏற்றுமதிக்குத் தகுந்த சர்க்கரை தயாரிக்க முடியும். தென்னாட்டில்தான் சர்க்கரை ஆலை வளர்வதற்கு வசதியும் வாய்ப்பும் இருக்கிறது!

1948—49ல் உ. பி யில் ஏக்கர் ஒன்றுக்கு கரும்பு உற்பத்தி 12·7 டன் விதம்தான் இருந்தது. ஆனால் அதே சமயத்தில் தமிழகத்தில் ஏக்கருக்கு 25 டன் விதம் இருந்தது. உ. பி. யின் கரும்பு உற்பத்தியைவிட ஒரு மடங்கு அதிகமாக இருந்தது. 1952-53ல் உ. பி. யில் நவீன முறைப்படி பயிர் செய்தும் கிடைத்தது ஏக்கருக்கு 17 டன்களாகும். அதே சமயத்தில் தென்னாட்டில் 33·9 டன்களாகும். திரு. எம். பி. 'காந்தி' அவர்கள் 40 டன்கள் வரை தென்னாட்டில் உற்பத்தியைப் பெருக்கமுடியும் என்று குறிப்பிட்டுள்ளார்கள்!

நமது திராவிடத்தில் இருந்த—இருக்கின்ற வளம் குறித்து நாம் பெருமைப்படலாம்! என்றாலும் சர்க்கரை ஆலைகள் இங்கு சிறக்கவில்லை. 1956—57ல் தென்னகத்தில் மொத்தம் 18 ஆலைகள்தான் இருந்தன. இதில் தமிழகத்தில் 4ம், ஆந்திராவில் 9ம், மைசூரில் 4ம், கேரளத்தில் 1ம் ஆகும். ('காமர்சு'—வருடாந்தர மலர், டிசம்பர் 57)

"திராவிடம்" நல்ல வளமுடன் திகழ்ந்தும் ஆலைகள் இங்கு சிறக்கவில்லை! வெள்ளையனிடம் இருந்து விடுபட்டும் நமக்கு வாழ்வில்லை. கனம் காமராசர் ஆண்டும்கூட 'கதி' கிடைக்கவில்லை! உ. பி. யிலோ வளம் தென்னாட்டைவிடக் குறைவாக இருந்தும் ஆலைகள் அதிகம் வளர்ந்துள்ளன! இன்னும் வேண்டும் எனப் போராடுகின்றனர். முதல் அமைச்சரே தலைமை தாங்கிப் போராட்டம் நடத்துகின்றார். இப்போது வரும் செய்திகளைப் பார்க்கும்போது. உ. பி. யினர் தங்களது கோரிக்கைகளிலும் வெற்றிபெற்றுவிட்டதுபோல் தெரிகிறது!

ஆனால் நமது மாநில ஆட்சியினரை நினைக்கும்போது வேதனையாகத்தான் இருக்கிறது. 'டெல்லி'யிடம் தைரியமாக — எதிர்த்து அல்ல—நேரில் பேசவே பயப்படுகின்றனர் போலும்! ஆனால் நம்மிடம் மாத்திரம் "வடநாடாவது தென்னாடாவது எல்லாம் ஒன்றுதானே" என்றும், "தென்னாடு தேயவில்லை, வஞ்சிக்கப்படவில்லை என்றும்" சொத்தை வாதம் புரிகின்றனர்!

வளத்திற்கு மிஞ்சிய ஆலைகளிலிருந்தும் மீண்டும் கோரிக்கை எழுப்பியவாறு இருக்கின்றனர்—உ. பி. யில். ஆனால் இங்கு வளமிருந்தும் போதிய ஆலைகள் இல்லை. என்பது மாத்திரமல்ல 'டெல்லி'யிடம் தட்டிக்கேட்கும் தைரியம் கூட இல்லை. உ. பி. யும், டெல்லியும் காங்கிரசின் ஆட்சிக்குட்பட்டதாகும். எனினும் தன் மாநில வளர்ச்சிக்காக வாதாடும் அந்த உணர்ச்சி எங்கே? டெல்லிக்குக் காவடி தூக்கி தொண்டனிடும் நம் மாநில ஆட்சியாளரின் தாசர் புத்தி எங்கே?

திருமணம்.

புதுக்கோட்டை அன்பு நிலையத்தில் 1—6—59உ காலை 9-30 மணி அளவில் திரு. ஆராம சின்னையா அவர்கள் மகள் திருவாளர், செல்வி. சி. தமிழ்க்கொடிக்கும் செம்பனூர் கோவில் திரு. ஏ. எஸ். முத்தையா அவர்கள் மகன் திருவளர்ச் செல்வன். மு. ஜெயராமன் பி. எஸ் சி. பி. டி. க்கும் அன்று எம். ஏ எம். எல். ஏ அவர்கள் தலைமையில் திருமணம் இனிது சிறப்பாக நடைபெற்றது. உறவினர்களும், நண்பர்களும் பெரும் திரளாக வந்து இருந்தனர்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

மாட்டார்கள். ஆனால் இன்றைய தினம் நாம் காணுவதென்ன? 'வடநாடு வளரவுமில்லை, தென்னாடு தேயவுமில்லை' எனப் பலர் ஆவேசத்தோடு அலறுகின்றனர். உண்மை உரைப்போரை உதாசீனப் படுத்துகின்றனர்.

ஆளவந்த அமைச்சர் பெருமக்களோ தங்கள் வாழ்வே பெருவாழ்வு என எண்ணிக்கொண்டு வாயிருந்தும் ஊமைகளாய், கண்ணிருந்தும் குருடர்களாய், திறனிருந்தும் தெளிவற்றவர்களாய் உலா வருகின்றனர். அவர்கள் கடமையையுணரவேண்டும். ஆண்டாண்டுக் காலமாய் வடநாடு பாசனத் துறையில் வளர்ந்திருக்கிறது. அதுபோதும் தற்சமயம், தென்னாடு வளர வாய்ப்பளியுங்கள், அதற்கான பண வசதியளியுங்கள். இப்படி உரிமையை நிலைநாட்ட உணர்வுடன் குரலெழுப்ப வேண்டாமா ஆளவந்தவர்கள். வடநாடு வளரத் தென்னாடு தேய்ந்தது போதும். தேய்ந்த அளவு முன்னேற வளர்ந்த வடநாடே, வகை செய் என முழங்கவேண்டாமா? ஆளவந்த காங்கிரஸ்காரர்கள் வடநாட்டுக்காரர்களுக்குத் துதி பாடுகிறார்கள்.

நீர்ப்பாசனத் துறை அமைச்சரே இக்கதிக்கு ஆளாக்கிய இந்திய சர்க்காருக்கு ஏஜெண்டாகிறார். பசப்புகின்ற பந்துவுக்கு பாராட்டுரை வழங்குகிறார். இப்படி இருப்பின் திராவிடம் முன்னேறுவது எங்கே?

எனவேதான் திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாம் திட்டங்கள் தீட்ட உரிமைவேண்டும். அதிகாரம் அனைத்தும் நம் கையில் இருக்கவேண்டும் என எடுத்துக் கூறி வருகிறோம். எல்லாத் துறைகளிலும் தென்னகம் பின் தங்கியுள்ளதை விவரித்துக் கூறுகிறோம். இதை ஆதாரங்காட்டி மறுத்துக் கூற மதியில்லாதவர்கள், கேலி பேசி, பழியுரைத்துத் தப்பிக்க முனைகின்றனர்.

திராவிடம் உரிமையுடன் உணர்வு பெற்று விடுதலையடையும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது இவையனைத்தும்.

போலீஸ் குரல்

[தி. ஜெயராமன்]

[பண்டிதர் நேரு உதகைக்கு வந்தாரல்லவா? அதையொட்டி நிகழ்ந்த உண்மையோடு கலந்த கற்பனை உரையாடல்.]

உதகைக் குன்றின் ஒரு பகுதி இரவு 12 மணியிருக்கும் — அதனை எங்கோ 'டிங் டிங்' என்று விட்டுவிட்டு ஒலித்த மணியோசை விளக்கிற்று. எங்கும் அமைதி! அருகிலுள்ள வீட்டிலிருந்து 'லொக் லொக்' என்ற இருமல் ஒலி கேட்டது. தூரத்தில் எங்கோ குக்கல் குரைத்துக்கொண்டிருந்தது. அனாதிக்கு துணைநின்றன இருளும் 'ஜில்'லென்று வீசிய காற்றும்.

மறைவான பகுதியில் மூன்று உருவங்கள் அமர்ந்திருந்தன! அவர்கள் கை கால்கள் குளிரால் நடுங்கிக் கொண்டிருந்தன. ஒரு உருவம் அணைந்துவிட்ட நெருப்பை ஊதிக் கொண்டிருந்தது. மற்றொரு உருவம் சிறு சிறு உலர்ந்தகுச்சிகளை ஒடித்துப் போட்டுக்கொண்டிருந்தது. ஆனால் அவர்கள் முகங்களைக் காண முடியவில்லை அந்த சிறு ஒளியால்.

திடீரென்று நெருப்பு, குச்சிகளில் பற்றிக்கொண்டு ஒளி பிறந்தது. மூன்று உருவங்களும் போர்த்தியிருந்த கோணி பைகளை விலக்கிவிட்டு கைகளை சூடேற்றின. அப்போதுதான் தெரிந்தது அவர்கள் மூவரும் போலீஸ்காரர்கள் என்று.

சிறிது நேரத்தில் மூவரும் ஒரு பெருமூச்சு விட்டனர். காற்ரோடு கலந்த பெருமூச்சு மீண்டும் எரிந்து கொண்டிருந்த நெருப்பை அணைத்துவிட்டது. மீண்டும் முயன்று எரிந்தது. பேச ஆரம்பித்தார் ஒரு போலீஸ்காரர்;

"என்ன பொன்னுசாமியண்ணே! மூணுபேருமா சேர்ந்து ஒரே தடவையில் பெருமூச்சு விட்டோமே? ஏன் அண்ணு நீங்க பெருமூச்சு விட்டீங்க எனக்குத்தான் கவலை இருந்தது—பெருமூச்சு வந்தது!"

"என்ன சின்னசாமி! உனக்கு மட்டுந்தானு கவலை? நானும் ஒரு சோகந்தாங்கிதானப்பா! இங்கே வந்து இருபது நாளாச்சு! சட்டசபையை கொண்டாந்தாங்களே அப்போ வந்தது. வர்றப்போ என் மனைவியை ஆஸ்பத்திரியிலே சேர்த்துட்டு வந்தேன்."

"ஏன்? என்ன காரணம்?"

"பிரசவ வேதனை தம்பி! நான் திருமணமாகி ஒன்றரை ஆண்டுஆச்சு அவளோடு இருந்து சந்தோஷப்பட்டது மூணுமாசம்தான் இருக்கும். பாரேன் திருமணமாகி — குழந்தை பிறக்கப்போவுது! அவளை ஒரே தடவை சினிமாவுக்குக் கூட்டிகிட்டு போயிருக்கேன் வேறெங்கும் போனதில்லே! 'இன்னிக்கு சமையலெல்லாம் சீக்கிரம் முடித்துவை வந்துடறேன் — சினிமா போலாம் — நல்ல படமாம் — குடும்பக் கதையாம் ஏதோ நேரம் ஒளிஞ்சிருக்கு' என்று சொல்லிவிட்டு போவேன். திடீரென்று புது வேலை வந்து சேரும். 'மந்திரி இந்தப் பக்கமா வராரு, மார்க்கட் மூலையிலே மக்கள் கூட்டம் அதிகம்—மாட்டு மந்தைகளும் வரும் கவனிக்கப் போ' என்று சொல் வாங்க போவேன். அப்போதெல்லாம்கூட நான் கவலைப்பட்டது கிடையாது. இப்போ இருபது நாளா இருப்பதா? இறப்பதா? என்றே தெரியவில்லை. அவள் எப்படி இருக்கிருள் என்ன ஆச்சு ஒன்றும் தெரியவில்லே? நமக்கு தெரிவிக்கிறதுக்கு மந்திரிங்களா? எம். எல். ஏ-க்களா— எந்த முகவரிக்கு தெரிவிப்பாங்க?"

முதல். குழந்தை—ஆணு, பெண்ணுன்னு தெரியவில்லே! ஊம்... இருபது நாள் ஓடியாச்சு! இன்னும் எட்டு நாளிருக்கு நாளைமறுநாள். நேருவரப் போருராம் அவருக்கு வேறு காவல்! ஏன் நம்மை வாட்டுருங்க—இவங்களை யாரு சுட்டு போட்ராங்க?

"என்னுண்ணே இது தெரியாதா? இந்த தி. மு. க. இருக்குதுல்லே அவங்க கருப்புக்கொடி அது இதுன்னு காட்டி கலாட்டா பண்ணிடுவாங்கோன்னு பயம்."

"என்ன மன்னார்சாமி! அவங்க அப்படி காட்டுவதானுலும் முதலிலேயே தீர்மானம்போட்டு, அறிக்கைவிட்டு எல்லாத்துக்கும் சொல்லித்தானே செய்யப்போருங்க! இவங்களுக்கு ஏன் இந்த பயம்?"

"இருக்கட்டும் மன்னாரு—நீ ஏன் பெருமூச்சு விட்டே?"

"காரணமில்லாமலா — உண்டு — எங்கப்பாவுக்கு தள்ளாத வயசு! கடுமையான காய்ச்சல்—காட்டாத டாக்டரில்லே! உங்களுக்கு தெரியுமோ என்னமோ நான் ஒரே மகன் —இந்த நேரத்திலே நான் பக்கத்திலே இல்லேன்னு எப்படியிருக்கும். அதனுல் காய்ச்சல் அதிகமாச்சு!"

"அட ஏன் மன்னாரு கண்ணீர் விட்டுப் புலம்புகிருய்?"

"நேற்று என் அப்பா இறந்து போனுர் என்று தந்தி வந்தது"

"அடடா, இந்தா மன்னாரு நீ கொஞ்சநேரம் சும்மா இருப்பா ஒன்னும் பேசாதே—தொண்டை அடச்சு இச்சி துக்கத்திலுலே?"

விக்கலுக்கிடையே பேசினுன் மன்னாரு "விடுமுறைகூட கொடுக்க மறுத்துவிட்டாங்க! நேரு வராராம் நேரு! ஐயா!......காந்தியார் வளர்த்த காங்கிரஸ் இப்படியா போகணும்?"

அவனைத் தேற்றினுர்கள் சின்னசாமியும் பொன்னுசாமியும்.

அமைதியைக் கிழித்துக்கொண்டு மன்னுரே பேச ஆரம்பித்தான் "ஆமாம், பொன்னுசாமி எங்களுக்குத்தான் கவலைன்னு குடும்ப பொறுப்பில்லாத காளை நீ! உனக்கென்ன கவலை?"

"நாம் மூணுபேரும் மூணு மாவட்டத்திலேயிருந்து வந்தவங்க! மூணு விதமான கவலை நம்மை பிடிச்சிகிட்டிருக்கு!" என்று சிறிது நிறுத்தினுன்.

"என்னப்பா, உனக்கு கவலை சொல்லேன்"

"வருகிற 10-ந்தேதி எனக்கு திருமணம்! இன்னும் ஒரு வாரம் இங்கு தங்கணுமாம்— நேரு போரவரைக்கும்! அப்புறம் யாரு வராங்களோ? வரலேன்னுலும் நான் கல்யாணத்துக்கு எப்படிங்க ஏற்பாடு செய்யறது? மூணு நாளிலே எல்லாம் முடியுமா? பணம் வேறு இல்லே! எங்கே போய் கேட்பேன்? இவ்வளவு குறுகிய காலத்திலே யார் கொடுப்பாங்க? அம்மா வேறு என்னை எதிர்ப் பார்த்துகிட்டே இருப்பாங்க?

"ஏன்? உனக்குத் தந்தை இல்லையா?"

"அவர் இருந்தால் நான் ஏன் பெருமூச்சுவிடப் போகிறேன்."

மீண்டும் ஒரு பெருங்காற்று நெருப்பை அணைத்துவிட்டது.